Registered as a NewsPaper

விலைரூபா-07

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் -08 | 21-03-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -032



உங்கள் அனைத்து தேவைகளுக்கும்

R.V. பந்தல் சேவை

முல்லைசாலை தருமபுரம்.

விநாயகர் வீதி, மயிலிட்டி.

# புலிகள் பேச்சு நடத்த சம்மதித்திருப்பதான சனாதிபதியின் கூற்றுக்கு தமிழ்செல்வன் மறுப்பு!

## -உண்மைக்குப் புறம்பானதெனத் தெரிவிப்பு

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் பேச்சுவார்த்தை நடத்த விடுதலைப்புலிகள் சம்மதித்திருப்பதாக சிறிலங்கா சனாதிபதி தெரிவித்துள்ளமையை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மறுத்துள்ளார். இது உண்மைக்குப் புறம்பானதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப்புலிகள் தம்முடன் இரகசியமாகத் தொடர்பு கொண்டிருப்பதாக சனாதிபதிசந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ள கருத்துக்கள் முற்றிலும் உண்மைக்கும் புறம்பானவை எனவும் அவை தவறானவை எனவும் ஊடகம் ஒன்றிற்கு தமிழ்ச்செல்வன் அவர்கள் வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவர் அச்செவ்வியில் மேலும் கூறும்போது; சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் செயலகம், தமிழீழவிடுதலைப் புலிகளைத் தொடர்புகொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுவது தவறான தகவல் என்றும் சனாதிபதியுடன் பேச்சு நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான கூற்று என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இனநெருக்கடிக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதில் விருப்பம் கொண்

(8ஆம் பக்கம் பார்க்க)


## நெதர்லாந்து தூதரக அதிகாரி தமிழ்ச் செல்வனுடன் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை இலங்கைக்கான நெதர்லாந்து தூதரக அதிகாரி சந்தித்துப்பேச்சு நடத்தியுள்ளார். இதில் சமகால அரசியல் விடயங்கள் தொடர்பாகவும், நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் பற்றியும், கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள நிலை தொடர்பாகவும் பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்று காலை 11மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள சமாதானச் செயலகத்தில் ஆரம்ப

(8ஆம் பக்கம் பார்க்க)



## கூட்டமைப்பினர் பெறும் வெற்றி தமிழினத்தின் விடுதலைக்கு வழிதிறக்கும்

### பெண்கள் சங்கம நிகழ்வில் இளம்பரிதி

எதிர்வரும் தேர்தலில் கூட்டமைப்பினர்பெறும்வெற்றி தமிழினத்தின் விடுதலைக்கு வழிதிறக்கும் என யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம் பரிதி யாழ். இல்நடைபெற்ற பெண்கள சங்கம நிகழ்வில் நிகழ்வில் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் மாபெரும் பெண்கள் சங்கம நிகழ்வு ஒன்று நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்இடம் பெற்றுள்ளது. யாழ். மாவட்ட பெண்கள் பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந் நிகழ்வில் தமிழர் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பத்மினி சிதம்பரநாதன் தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர்தமிழினி யாழ். மாவட்டஅரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி யாழ். மாவட்ட மகளிர்அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களான. கஜேந்திரன் ஆகியோர் உட்பட போராளிகள், பொது மக்கள்என பெருமளவானோர் கலந்து கொண்டனர். இதில் தமிழீழத்தின் தனித்தலைவர் வே.பிரபாகரன் அவர்களே அவரின்கைகளைப் பலப்படுத்த பெண்கள் யாவரும் ஓர் அணியில் திரள்வோம் என பல்வேறு கோஷங்களை எழுப்பி தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தினர் இதனைத் தொடர்ந்து சிறப்புரைகளும் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன.

இதில் இளம்பரிதி மேலும் தெரிவிக்கையில் ஒரு இனம் விடுதலை பெறவேண்டுமாயின் அதற்கு இராணுவ பலம், அரசியல்பலம், மக்கள்ஆதரவு சர்வதேச அங்கீகாரம் என்பன அவசியம். இதில் எமது இனம் மக்களின் ஆதரவுடன் முன்னெடுத்த விடுதலைப்போர் இராணுவ மற்றும் அரசியல் ரீதியாகவலுப் பெற்றுவிட்டது இந்த வலுவான போராட்டமும் போராட்டமூலம் வலுப்பெற்றுள்ள எமது இனம் தனிவிடுதலையைப் பெற்றுக் கொள்வதற்கு சர்வதேச அங்கீகாரம் அவசியம் இதனைப் பெற்றுக் கொள்வதற்வகாகவே இன்று தமிழ் மக்களுடைய ஆதரவுடன்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீமின் அமைச்சு வாகனத்திலிருந்து கைத் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது

### மூவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

அமைச்சர் ரஹூப்ஹக்கீமின் பொறுப்பில் உள்ள துறைமுக அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வாகனம் ஒன்றில் இருந்து கைத்துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம்நேற்று இடம்பெற்றுள்ளது இந்தவாகனம் திகாமட்டுல்லவிற்கு சென்றுகொண்டிருந்த வேளையில், சம்பாந்துறையில் வைத்துஅதனை சோதனையிட்ட பொலிசார், பிஸ்ரல் மற்றும் அதற்கான ரவைகளை மீட்டனர். இந்த வாகனத்தில் பயணம் செய்த மூவரும் கைதுசெய்யப் பட்டுள்ளனர். இவர்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்பின் போது சிக்கலேற்படுத்தப்படின் தேர்தல் ஒத்திவைக்கப்படும்

### -மட்டு.தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த முறையைப் போன்று தேர்தலில் வாக்களிப்பின் போது சிக்கல்கள் ஏற்படுமாயின் தேர்தல் ஒத்திவைக்கப்படுமென மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் இ.மோனகுருசாமி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவகட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் மக்களுக்கு எதிர் வரும் தேர்தலில் வாக்களிப்பதற்கு சம்பந்தமான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் ஆராயப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் .இ.மோனகுருசாமி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட இராணுவ

(8ஆம் பக்கம் பார்க்க)

## வைத்தியர் வேலை நிறுத்தத்தால் 1700 சத்திர சிகிச்சைகள் தாமதம்!

கடந்த வாரம் முதல் அரசாங்க வைத்தியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தால் சுமார் 1700 சத்திரசிகிச்சைகள் காலம் தாழ்ந்து போய்விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சத்திர சிகிச்சைகளை உரிய காலத்தில் செய்யாததால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை களுபோவில வைத்தியசாலையில் 1200 சத்திரசிகிச்சைகளும், குருநாகல் வைத்தியசாலையில் 500 சத்திர சிகிச்சைகளும், ராகம வைத்திய சாலையில் 200 சத்திரசிகிச்சைகளும் உரிய முறையில் செய்யப் படவில்லை எனவும் குற்றம்சாட் டப் பட்டுள்ளது. (32)

## - தேர்தல் சட்டங்களை மீறியமைக்காக - ஆறு வேட்பாளர்கள் உட்பட 337 பேர் இதுவரை கைது

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறியதற்காக ஆறு வேட்பாளர்களும், 331கட்சி ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் நிலவரங்களைக் கவனிக்கும் பொலிஸ் தெரிவித்துள்ளது.

ஹம்பகா மாவட்ட ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணி வேட்பாளர் சூரிய ஆராய்ச்சி,புத்தளம் மாவட்ட வேட்பாளர் பாலித்தரங்க பண்டார தி.மு.தசநாயக்க, இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் மகிந்த ரத்தினதிலக்க ஆகியோர் இதில் அடங்குவர். தற்பொழுது தேர்தல் சட்டங்களை மீறியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

## பௌத்த பிக்குவுக்கு கொலைமிரட்டல்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவாளர்கள் தமக்கு மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி சார்பில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடும் தம்மி லோக்க தேரர் கூறியுள்ளார்.

தனது விகாரைக்கு வந்து இவர்கள் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் இவர்களின் பெயர் விபரங்களைத் தாம் மாவத்தகம

(8ஆம் பக்கம் பார்க்க)

## - யாழ். மத்.கல்லூரி-பரியோவான் கல்லூரி- கிறிக்கெட் போட்டியின் போது சிறி. பொலிஸ்- மாணவர் மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மாணவர்களுக்கும் சிறிலங்கா பொலிசாருக்கும் இடையில் நேற்று இடம் பெற்ற பெரும் கைகலப்பு காரணமாக யாழ். நகரப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்று மாலை யாழ். நகரில் உள்ள யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது;

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் யாழ். பரியோவான் கல்லூரிஅணிக்கும் இடையே வருடாவருடம் நடைபெறும் வரலாற்று பெருமைமிக்க கிரிக்கெட் போட்டியின் இறுதிநாளான நேற்று இரு அணி வீரர்களுக்கிடையிலும் ஏற்பட்ட முறுகல் நிலையை சாதகமாகப் பயன்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### கொடுப்பனவு வழங்கல்

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்களது சேவை முடிவுறுத்தல் கொடுப்பனவு வழங்கப்படும் எதிர்வரும் 24,25/03/2004. திகதிகளில். வேலை முகாமையாளர் திரு.சிவபாதசுந்தரம் நிர்வாக அதிகாரி- திரு.ஜெகநாதன். (4331)

### அமல் பல் மூக்குக்கண்ணாடி அகம்

கண்பரிசோதித்து நவீன பிறேங்களில் கண்ணாடி வழங்குதல், பல்கட்டுதல், பல் கிளிப் போடுதல் என்பன உடன் செய்து கொடுக்கப்படும். தொடர்புக்கு: அமல் பல் மூக்குக் கண்ணாடி அகம், பரந்தன்சாலை புதுக்குடியிருப்பு. (4058)

# தமிழ்க் கூட்டமைப்பை ஆதரிப்பதன் மூலம் தமிழரின் அபிலாசைகளை உலகறியச்செய்வோம்

### - பரந்தன் பிரதேச தமிழர் தேசிய எழுச்சிப் பேரவை

(அலுவலக செய்தியாளர்)

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் இத்தேர்தல் காலம் ஒரு பதிவை மேற்கொண்டகாலமாக அமையப் போகின்றது. இன்று தமிழ்த் தேசியம் ஒன்றுபட்டு எதிர்கொள்ளும் ஒரு தேர்தலாக அமைகிறது எழுது விடுதலை வரலாற்றின் ஒவ்வொரு கட்டப்பேச்சுக்களின் போதும் புலிகள் வலியுறுத்திய தமிழர்களின் சுயநிர்ணயம் என்பது எவராலும் புறந்தள்ள முடியாத ஒன்றாகவே இருந்து வருகின்றது. விடுதலைப்புலிகள் சுயநிர்ணய உரிமையின் அடித்தளத்திலிருந்து கட்டியெழுப்பப்படும் ஒரு பலம் பொருந்திய விடுதலையாகவே பெற்றுவிட வலியுறுத்தி வந்துள்ளனர். அதாவது தமிழர்களின் தன்னாட்சி அதிகாரத்திற்கான திட்டவரைபொன்றை புலிகள் சிறிலங்கா அரசிற்குச் சமர்ப்பித்திருக்கும் நிலையில் அது தொடர்பான பேச்சுக்கள் இன்னும் ஆரம்பிக்காதநிலையில் தோன்றியிருக்கும் தேர்தலாகும் என பரந்தன் பிரதேச தமிழர் எழுச்சிப்பேரவை தெரிவித்துள்ளது. மேலும் தெரிவிக்கையில் இத்தேர்தலை தமிழ் மக்கள் வெற்றிகொள்வதன்மூலம் எமது பிரச்சினைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் தீர்வொன்றை முன்மொழிவதோடு எதிரிகளின் தமிழர்தாயக சிதைப்பு எண்ணத்தினை உடைத்தெறியவும் முடியும். இதன்மூலம் தமிழர்தாயகம், தமிழர்தேசியம், தன்னாட்சியை பெற முடியும். எதிர்வரும் ஏப்ரல் இரண்டாம் திகதி வரும் இத்தேர்தலை தமிழர் தேசியக்கூட்டமைப்பு விடுதலைப்புலிகளின் ஆதரவோடு தமிழினத்தின் அபிலாசைகளை உலகறியச் செய்வதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளது. இலங்கையின் தேர்தல்களை நீண்ட காலமாக பகிஷ்கரித்து வந்த தமிழினம் இக்காலத்தின் தேவையை உணர்ந்துள்ளது. இன்று உலகமே உற்றுநோக்கிக் கொண்டிருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத்தேர் தலை சரியான முறையில் பயன்படுத்தி அனைத்துத் தமிழினமும் இணைந்து தமிழ் மக்களின் ஏகோபித்தமன உணர்வுகளையும் அரசியல் அபிலாசைகளையும் வெளிப்படுத்த முன்வர வேண்டும் எனவும் பரந்தன் பிரதேச தமிழர் தேசிய எழுச்சிப் பேரவை வேண்டுகோள்விடுக்கின்றது.(சோ)

# பூநகரிக்கோட்டத்தில் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான பாராட்டுவிழா

பூநகரிக் கல்விக்கோட்டத்தில் தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த 12 மாணவர்களுக்கான பாராட்டுவிழா பூநகரிக கோட்ட ஆரம்பக்கல்வி அபிவிருத்திப் பிரிவினால் இன்று மு.ப.9.00 மணியளவில் முழங்காவில் ம.வி.மண்டபத்தில் பூநகரி கோட்டக்கல்வி அலுவலர் தி.கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் அவர்களும், சிறப்பு விருந்தினராக தமிழீழ கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர் க.அருள் ஆசிரியர் அவர்களும் கலந்துகொள்வார்கள். அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற சமூகக்கல்விப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற நல்லூர் ம.வி.மாணவன் செல்வன் உ.அனுராஜ் அவர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துணுக்காய், பாண்டியன்குளம் பகுதிகளில் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள்

(மல்லாவி)

துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் தியாகி அன்னை பூபதியின் நினைவுநாட்களின் ஆரம்பநாள் நிகழ்வுகள் எழுச்சி பூர்வமாக நடைபெற்றன.

துணுக்காய் பிரதேசத்தில் தியாகி அன்னை பூபதியின் 16ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு மல்லாவி மாவீரர் மண்டபத்தில் முல்லை. மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் அன்பரசி தலைமையில் காலை 9.00 மணிக்கு இடம்பெற்றது.

தமிழீழத் தேசியக் கொடியினை துணுக்காய் அரசியல் துறைப் பொறுப்பாளர் த. தர்மேந்திரா ஏற்றிவைத்தார். திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை மல்லாவி வைத்திய சாலையைச் சேர்ந்த திருமதி. கந்தசாமி ஏற்றி வைக்க மலர் மாலையினை துணுக்காய் பல. நோ. கூ. சங்கப் பொது முகாமையாளர் மு. ஜெகநாதன் அணிவித்தார். மலர் வணக்கத்தைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. துணுக்காய் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் அ. அமிர்த லிங்கம் அப்பிரதேச மாணவர் அமைப்பு பொறுப்பாளர் வெண் ணிலா ஆகியோர் நினைவுரை ஆற்றி னர். சிறப்புரையினை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் த. தர்மேந்திரா நிகழ்த்தினார்.

மேற்படி நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச, அரச சார்பற்ற பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பாண்டியன்குளம் பிரதேசத்தில் தியாகி அன்னை பூபதியின் 16ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் பாலிநகர் மாவீரர் மண்டபத்தில் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சி. சண்முகலிங்கம் தலைமையில் காலை 9.00 மணிக்கு இடம் பெற்றது. தமிழீழ தேசியக் கொடியினை பாண்டியன்குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. கலைவாணன் அவர்கள் ஏற்றி வைத்தார். திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை மாவீரன் சாரதியின் தந்தை ரத்தினம் ஏற்றி வைக்க மலர் மாலையை வர்த்தக சங்கத் தலைவர் சிங்கன் அணிவித்தார். தொடர்ந்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டு அக வணக்கம் இடம்பெற்றது. (24)

# வாக்காளர் போக்குவரத்து ஒழுங்கு குறித்து கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

தேர்தல் வாக்காளர்களுக்கு போக்குவரத்து ஒழுங்குகள் செய்தல் தொடர்பாக பாரஊர்தி சங்க பிரதிநிதிகளுடனும், ப.நோ.கூ.சங்கதலைவர், முகாமையாளர்களுடனான கலந்துரையாடல் நாளை பகல் 11.00 மணிக்கு கிளி. அரச அதிபர் தலைமையில் மாவட்ட செயலக மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

எனவே தங்கள் சங்கத்திலுள்ள வாகனங்களின் விபரங்களுடன் இக் கலந்துரையாடலில் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கிளி.அரசஅதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ)

### -கிளி. அரச அதிபர் செயலகத்தில்

# தேர்தல் கடமைதொடர்பாக அவசர கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

தேர்தல் கடமை சம்பந்தமான கிளி.மாவட்ட சகல உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் மாவட்ட கிராமசேவை அலுவலர்களுடனான அவசரகலந்துரையாடல் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு கிளி.மாவட்ட அரசஅதிபர்தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி அவசர கலந்துரையாடலில் மேற்குறிப்பிட்ட அனைவரையும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கிளி அரசஅதிபர் வேண்டியுள்ளார். (சோ)

# மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவு மீளாய்வு வேலைகள் ஆரம்பம்

கண்டாவளை பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான மீளாய்வு வேலைகள் பின்வரும் திகதிகளில் குறித்த இடங்களில் நடைபெறவுள்ளதாக சமூக சேவை உத்தியோகத்தர் ந.தசரதராஜகுமாரன் அறிவித்துள்ளார்.

நாளை குமரபுரம், உமையாள் புரம், பரந்தன் பகுதி மக்களுக்கு காலை 9.00-12.00 மணிவரை பரந்தன் கி.சே.அலுவலகத்திலும், அதேதினம் பி.ப.1.00- மாலை 4.00 மணிவரை ஊரியான் கோரக்கன்கட்டு முரசுமோட்டை பகுதிக்கு ஊரியன் கி.சே. அலுவலகத்திலும 23/3/2004. கல்மடுநகர் பகுதிக்கு காலை 9.00-12.-00மணிவரை கல்மடு நகர் கி.சே அலுவலகத்திலும், அதேதினம் புளியம்பொக்கணைப் பகுதிக்கு புளியம்பொக்கணை கி.சே.அலுவலகத்தில் பி.ப.1.00-4.00 மணிவரையும், 24/3/2004 கண்டாவளைப் பகுதிக்கு காலை 9.00-12.00 மணிவரை கண்டாவளைப் பிரதேசத்திலும் அதே தினம் பி.ப.1.00-4.00 மணிவரை பெரியகுளம் பகுதிக்கு பெரியகுளம் கி.சே.அலுவலகத்திலும். 25/3/2004 திகதி தர்மபுரம் கிழக்கு/மேற்கு பகுதிக்கு காலை.9.00 -மாலை 4.00 மணிவரை தர்மபுரம் கிழக்கு கி.சே.அலுவலகத்திலும், 26/3/2004 பிரமந்தனாறு, தட்டுவான் கொட்டி, கண்ணகிநகர் பகுதிக்கு காலை 9.00-12.00 மணிவரை பிரமந்தனாறு கி.சே.அலுவலகத்திலும், அதேதினம் பி.ப.1.00-4.00 மணிவரை புன்னை நீராவி பகுதிக்கு கி.சே.அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது. பொதுசன மாதாந்த உதவிப் பணம் தற்போது தபாலகங்கள் மூலம் வழங்க அரம்பித்துள்ள தால் அனைவரும் தவறாது மீளாய்வு செய்து தங்களது கொடுப்பனவை தொடர்ந்து பெற்றுக்கொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (14)

## கண்டெடுப்பு

(ஒட்டுசுட்டான்)

வற்றாப்பளை முள்ளியவளை எனும் இடத்தைச் சேர்ந்த கந்தசாமி திலகராசா என்பவருடைய அடையாள அட்டை (811395064V)யும், வட பகுதிக்குச் வெளியே செல்லும் பயண அட்டையுடன் பேஸ் ஒன்று புதுக்குடியிருப்புக்கும் கேப்பாபிலவுக்கும் இடையில் கண்டெடுக்கப்பட்டு ஒட்டுசுட்டான் அரசியல்துறை செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் பெற்றுக்கொள்ளவும். (05)

## காணவில்லை

க.இமானுவேல் (புதுக்குடியிருப்பு) என்பவரின் மனைவி அஜித்தா, பிள்ளை கபில் ஆகிய இருவரையும் காணவில்லை. இவர்கள் இருவரையும் கண்டவர்கள் அல்லது இவர்கள் குறித்த விபரம் தெரிந்தவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் துறை செயலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

# குடாநாட்டில் விசர்நாய் கடிக்கு இலக்காகி இருமாதங்களில் 400பேர் சிகிச்சை!

### –6 பேர் உயிரிழந்ததாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விசர் நாய் கடிக்கு இலக்காகி மரணிப்போர் தொகை யாழ் குடாநாட்டில் அதிகரித்து வருவதாக யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விசர் நாய்களை கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமையே விசர் நாய் கடிச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமைக்குக் காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

அந்த வகையில் இவ்வாண்டு ஆரம்பமாகியதிலிருந்து கடந்த இருமாத காலத்துக்குள் 6பேர் விசர்நாய்க்கடிக்கு இலக்காகி மரணித்திருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலைப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் விசர்நாய்க்கடிக்கு இலக்காகி கடந்த இருமாத காலத்துள் 400றிற்கும் மேற்பட்டோர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. (33)

# சாவு அறிவித்தல்

## வைரமுத்து நாகம்மா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து நாகம்மா டென்மார்க்கில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு வைரமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (கொழும்பு), காலஞ்சென்ற கணேசமூர்த்தி (கொழும்பு), வைத்தீஸ்வரமூர்த்தி (கிராமசேவையாளர், உருத்திரபுரம் வடக்கு), காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி (புங்குடுதீவு), புண்ணியமூர்த்தி (சுவிஸ்), நடேசமூர்த்தி (லண்டன்), கனகலட்சுமி (லண்டன்), நாகலட்சுமி (சுவிஸ்), பத்மாவதி (லண்டன்), திலகவதி (டென்மார்க்) ஆகியோரின் அருமைத்தாயாரும் இராசேஸ்வரி (கொழும்பு), விஜயலட்சுமி (கொழும்பு), கௌசலா (உருத்திரபுரம் வடக்கு), சர்வேஸ்வரி (சுவிஸ்), சர்வலீலா (சந்தோசம்) (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22.-03-2004 (திங்கட்கிழமை) அன்று காலை 10.00 மணிக்கு டென்மார்க்கில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்
வைரமுத்து வைத்தீஸ்வரமூர்த்தி,
கிராமசேவையாளர்,
உருத்திரபுரம் வடக்கு. (4332)

# இந்தோனேசிய பொதுத் தேர்தலுக்கு முன் பயங்கரவாதத் தாக்குதல் நடைபெறலாம்!

## -அமெரிக்க வெளியுறவு அமைச்சர் எச்சரிக்கை

(ஜகார்த்தா)

**ஏப்ரல் மாதம் பாராளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கவுள்ள இந்தோனேசியாவில் தேர்தலுக்கு முன்னர் பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெறலாம் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.**

குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் தொடர்ச்சியான அச்சுறுத்தல் காணப்படலாம் என்று அமெரிக்கா இந்த எச்சரிக்கையில் தெரிவித்துள்ளது.

ஸ்பெயினில் தேர்தலுக்கு முன்னர் இஸ்லாமிய தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படுவோர் 202பேரை படுகொலை செய்ததை சுட்டிக்காட்டிய அமெரிக்கா இந்தோனேசியாவில் உள்ள தீவிரவாதிகளும் அந்த நாட்டு தேர்தலுக்கு முன்பாக இதே போன்ற தாக்குதலை நடத்தலாம் என்று வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் எச்ச ரித்துள்ளார்.

இதேவேளை இந்தோனேசியாவிற்கு வெளிநாட்டவர்கள் பிரயாணம் செய்வது குறித்தும் அமெரிக்கா எச்சரித்துள்ளது.

# அல்-ஹைதா அமைப்பினரின் பாரிய மறைவிடம் பாகிஸ்தான் படையினரால் சுற்றிவளைப்பு!

## -இரண்டாம் நாளாக மோதல் தொடர்கிறது

ஆப்கானிஸ்தானின் எல்லைப் புறத்தில் ஒசாமா பின்லேடன் தலைமையிலான அல்-ஹைதா இயக்கத்தின் இரண்டாவது தளபதி எனக் கருதப்படும் அல்மான் அல்-செவாரி தங்கியிருக்கும் காட்டுப்பகுதியை பாகிஸ்தானியப் படையினர் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் ஆதிவாசிகள் வசிக்கும் தென்பகுதிக் காட்டுப்பகுதியில் அல்-ஹைதா இயக்கத்தைச் சேர்ந்த 400பேர் தங்கியிருந்ததாகவும் இவர்கள் பாகிஸ்தானியப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக தீவிரவாதிகளுக்கும் பாகிஸ்தான் ராணுவத்தினருக்கும் இடையில் கடந்த 24மணி நேரத்திற்கு மேலாக தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அல்-ஹைதா இயக்கத்தின் நடவடிக்கை ஆலோசகரான எகிப்திய வைத்தியரான சவாகரியும் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இதேவேளை வெளிநாட்டைச் சேர்ந்த தீவிரவாதிகளும் இதில் அடங்கியிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இரண்டு தனித்தனி சம்பவங்களில் இரண்டு தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் இராணுவ அதிகாரி ஒருவர் ஏனையவர்களை சரணடையுமாறும் அல்லது விளைவு விபரீதமானதாக இருக்கும் எனவும் எச்சரித்துள்ளார்.

### உயிரினங்கள் பல அழியும் அபாயம்!

(லண்டன்)

ஆறு கோடி ஐம்பது இலட்சம் வருடங்களுக்கு முன்னர் டைனோசர் எனப்படும் பிரமாண்டமான மிருகங்கள் உலகில் அழிந்தது போன்று தற்போது பூமியில் உள்ள அநேகமான உயிரினங்கள் அழிந்து போகும் ஆபத்து எதிர்நோக்கப்படுவதாக இரண்டு பிரிட்டிஷ் ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

பிரிட்டனில் பூச்சியினங்கள், செடியினங்கள் பல முன்னரையும் விட பல மடங்கு தற்போது அழிந்து வருவதாக அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

# பின்லேடன் பாகிஸ்தானில் மறைந்திருக்க வாய்ப்பில்லை!

## உள்துறை அமைச்சர் கூறுகின்றார்

சர்வதேச பயங்கரவாதியாக கூறப்படுகின்ற பின்லேடன் பாகிஸ்தானில் ஒளிந்திருக்க வாய்ப்பில்லை என்று பாகிஸ்தான் உள்துறை மற்றும் போதை மருந்து தடுப்புதுறை அமைச்சர் மக்தூம் சையதுபைசல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து லண்டனில் பி.பி.சி. உலக நிகழ்ச்சிக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் பின்லேடன் பதுங்கி இருக்க வாய்ப்பில்லை இங்கு பதுங்கி இருந்தால் பாகிஸ்தான் இராணுவத்திடம் அவர் சிக்கியிருப்பார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பாகிஸ்தான் இராணுவம் தீவிர தேடுதல் வேட்டையை நடத்தி வருகின்றது. பாகிஸ்தானின் எல்லைப்பகுதி 2500 கி.மீ தூரத்திற்கு விரிந்து கிடப்பதால் தேடுதல் வேட்டை கடினமான பணியாக இருந்து வருகிறது. எல்லை ரோந்துப் பணியில் 70 ஆயிரம் வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். தற்போது எல்லை மூடப்பட்டுள்ளது என்றார்.



கடந்த வியாழன் அன்று 101 வது விமானப் படையினர் மத்தியில் உரையாட வருகை தந்திருந்த அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்

-மட்றிட் குண்டுத் தாக்குதல்-

# 3 மொறோக்கோ வாசிகள் மீது நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல்!

(மட்றிட்)

ஸ்பெயினின் தலைநகர் மட்றிட்டில் இடம்பெற்ற ரயில் குண்டு வெடிப்பு தாக்குதல் சம்பவம் தொடர்பாக நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட மூன்று மொறோக் கோவாசிகள் மீது 190 கொலை களை புரிந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆனால் தங்களுக்கும் அல்-ஹைதா இயக்கத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லை எனத் தெரிவித்துள்ள இந்த மூன்று சந்தேக நபர்களும் குண்டுத் தாக்குதல் நடந்தபோது தாங்கள் நித்திரையில் இருந்ததாகத் தெரிவித்துள்ளனர்.



பலஸ்தீனத்தின் மேற்குக் கரை கிராமத்தைப் பிரித்து அமைக்கப்படும் இஸ்ரேலிய தடுப்புச்சுவர் தொடர்பாக ஆட்சேபம் தெரிவிக்கும் பலஸ்தீனரை மிரட்டும் இஸ்ரேல் படைவீரர்

# ஐ.நா. அணுவாயுத பரிசோதகர்களை வடகொரியாவுக்கு அனுப்ப யோசனை

வடகொரியாவுக்கு அணுவாயுத பரிசோதகர்களை மீண்டும் அனுப்புவதற்கான திட்டம் குறித்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும் அமெரிக்காவும் உன்னிப்பாக ஆராய்ந்து வருவதாக நேற்று ஐக்கிய நாடுகள் சர்வதேச அணு சக்தி ஸ்தாபனத்தின் தலைவர் மொகமட் அல்பராடி தெரிவித்துள்ளார்.

கம்யூனிஸ்ட் நாடான வடகொரியாவில் இதற்கு முன்னர் பணியாற்றிய ஐக்கிய நாடுகள் சோதனைக் குழுக்களையும் பார்க்க தற்போது அனுப்பப்பட இருக்கும் குழு மிகவும் கடுமையாக நடந்து கொள்ளும் என்று அல்பராடி கூறியுள்ளார்.



ஈராக்கில் மீண்டும் ஒருகார் குண்டுவெடிப்புச் சம்பவம் நடைபெற்றிருப்பதைப் படத்தில் காண்க. இதற்கு முன்பும் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 7 பேர் பலியானதற்கு அல்ஹைதா அமைப்பு உரிமைகோரியுள்ளது.

# சூடான் அகதிமுகாம் மக்களை அகற்றும் முயற்சி தோல்வி

## மோதலில் 18பேர் காயம்

(காட்டும்)

சூடான் தலைநகரில் அகதிமுகாம்களில் வாழும் மக்களை வேறு இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது ஏற்பட்ட கலவரங்களில் குறைந்தது மூன்று பொலிசாரும் 15 பொது மக்களும் காயம் அடைந்துள்ளனர்.

உள்நாட்டு யுத்தம் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு அங்குள்ள மாணவர் அமைப்பொன்று உதவியளித்து வருகின்றது. அகதிகளை வெளியேற்ற முற்பட்டபோது அதைத்தடுக்க முற்பட்ட மாணவர்களோடு பொலிசார் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

# பயங்கரவாதத்திற்கு எதிரான போரிற்கு உலகத் தலைவர்கள் ஒன்றுபட வேண்டும்

## -அமெரிக்க சனாதிபதி புஷ் அழைப்பு

(வாஷிங்டன்)

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் உலகத் தலைவர்கள் வலுவாகவும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஒவ்வொரு அரசும் உலகம் தழுவிய அச்சுறுத்தலை எதிர்த்து போராட வேண்டியது அவர்களது கடமையாகும் எனத் தெரி வித்தார்.

ஸ்பெயினின் தலைநகர் மட்றிட்டில் சமீபத்தில் நடந்த கொலைகளை நினைவு கூர்ந்து புஷ் பலவீன அறிகுறிகள் மேலும் வன்முறைக்கே வழிவகுக்கும் எனவும் தெரிவித்தார்.

அமெரிக்க மக்களை பயங்கரவாதிகள் தொடர்ந்தும் குறி வைத்து வருகின்றனர். எனவே அவர்கள் வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும்போது விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் ஜோர்ஜ் புஷ் எச்சரித்துள்ளார்.

### விமானங்களுக்குத் தடை!

அமெரிக்கா சிரியா மீது விதித்துள்ள புதிய தடைகளில் சிரியாவின் விமானங்கள் அமெரிக்காவில் பிரவேசிப்பது தடை செய்யபபட்டுள்ளது.

அமெரிக்காவின் பயங்கரவாதப் பட்டியலில் அடங்கிய குழுக்களுக்கு சிரியா ஆதரவு வழங்குவதாக அமெரிக்கா சந்தேகிக்கின்றது.



சான்பிரான்சிஸ்கோவிலுள்ள தனது விஞ்ஞான ஆய்வு கூடத்தில் புற்று நோய் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள எலிசபெத் பிளக்பர்ன் என்ற புகழ்பெற்ற விஞ்ஞானி.

# புஷ்சிற்கு எட்டாக்கனியாகிவிட்ட அமெரிக்க தேர்தல் வெற்றி

"ஈராக்கின் எண்ணெய் வளத்திற்காகவே அமெரிக்கா போரைத் தொடங்கியது. இன்று வரைநடத்திக் கொண்டிருக்கின்றது. இதற்காக நான் போராடவிரும்பவில்லை. மற்றைய வீரர்களும் இதற்காகப் போராடுவார்கள் என்று நான் நம்பவில்லை.

அத்துடன் ஈராக் கில் தொடரும் நாளாந்தத் தாக்குதல்களால் எமது படைவீரர்கள் மரணத்தைத் தழுவிக் கொள்கின்றார்கள். அதற்காக பதில் தாக்குதல் நாம் நடத்துவதால் அப்பாவி ஈராக் மக்களே கொல்லப்படுகின்றார்கள். இதற்கு எனதுமனம் ஒப்பவில்லை. எனது மனநிலை குழம்பிப் போயுள்ளது. அதனால் என்னால் மீண்டும் ஈராக் செல்ல முடியாது"



ஜோர்ஜ் புஷ்

இது கடந்த ஐந்து மாதங்களாக ஈராக்கில் கடமையாற்றிவிட்டு விடுமுறையில் நாடு திரும்பியுள்ள அமெரிக்கப் படைவீரரின் கருத்து.

இது ஒரு படைவீரரின் மனநிலை மட்டுமல்ல, ஈராக்கில் உள்ள ஒட்டு மொத்தப் படைவீரர்களின் கருத்தாகவே உண்மையில் அவதானிக்க வேண்டியுள்ளது.

கடந்த பல மாதங்களுக்கு முன்னர் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ் ஈராக்கில் உள்ள அமெரிக்க படையினர் இடையே திடீரெனத் தோன்றினார். படை வீரர்களுக்கு தனது கையாலேயே உணவு பரிமாறினார். அவர்களுடன் சேர்ந்து உணவு அருந்தினார்.

இத்தகைய செயலானது ஈராக் போரால் சலிப்படைந்துள்ள அவர்களை வலுப்படுத்தும் எனும் புஷ்ஷின் நம்பிக்கை நேற்றுவரை வீண்போகவில்லை எனலாம்.

ஆனால் இன்றுநிலைமை மாறிவிட்டது. நேற்றுப்போல் இன்று இல்லை என்று சொல்லும் பழமொழி உண்மையாகி விட்டது.

அதனால் தான் அமெரிக்க படைவீரர் ஒருவர் இவ்வாறு அமெரிக்க சனாதிபதியின் செயல்முறை பற்றி அதிருப்தியும் வெறுப்பும் வெளியிட்டுள்ளார்.

இந்த நிலை மாறவேண்டும். இல்லையேல் அமெரிக்க சனாதிபதி ஏற்கனவே மிகுந்த நெருக்கடிக்குள் இருக்கும் போது இந்த நெருக்கடியும் புதிய உபாதைகளை ஏற்படுத்திவிடும்.

இதேவேளை ஸ்பெயினில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த ஆட்சி மாற்றத்துக்கு பிரதான காரணியாக ஈராக்விடயம் அமைந்துள்ளது.

ஸ்பெயின் முன்னாள் பிரதமர் ஈராக்கிற்கு ஸ்பெயின் இராணுவத்தை அனுப்பியிருந்தார். ஈராக்கில் தொடரும் பலத்த தாக்குதல்களால் ஸ்பெயின் இராணுவத்தினரும் பலியாகியுள்ளனர். இந்த மரணம் ஸ்பெயின் மக்களை கிலிகொள்ளவைத்துள்ளது.

அதனால் தான், "ஈராக்கில் இருந்து ஸ்பெயின் இராணுவம் உடனடியாக திருப்பி அழைக்கப்படுவார்கள்" என்று கூறி புதிய ஸ்பெயின் பிரதமராக ஸெபா டரோ தேர்தலில் வெற்றியீட்டியுள்ளார்.

அதேபோல் பதவியேற்றவுடன் ஸ்பெயின் இராணுவம் ஈராக்கில் இனி அமைதிப்பணியில் ஈடுபட அனுமதிக்க முடியாது என்றும் திருப்பி அழைக்கப்போவதாகவும் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கை ஸ்பெயின் அமெரிக்காவுடனான உறவுகளை வெட்டிக் கொள்வதற்கு ஒப்பானது.

அதேநேரம் ஸ்பெயினின் இந்த அதிரடி முடிவு ஏனைய நாடுகளிலும் தாக்கம் செலுத்தத் தவறவில்லை. அந்த வகையில் தான் நெதர்லாந்தின் முடிவு அமைந்துள்ளது.

டச்சுப்படைகள் ஈராக்கில் இருந்து திருப்பியழைக்கப்பட வேண்டும். என்று நெதர்லாந்து மக்கள் கூறியுள்ளார்கள். இதனை நெதர் லாந்து கருத்துக்கணிப்பொன்று கூறியுள் ளது.

எனவே வெகுவிரைவில் நெதர்லாந்தும், தனது டச்சுப்படைகளை ஈராக்கில் இருந்து அழைக்க முற்படும் என்பது அமெரிக காவை பொறுத்தவரை பலத்த அடியாக மாறிவிடும்.


ஏற்கனவே அமெரிக்கப் படைவீரர்கள் தற்கொலை செய்கின்றார்கள்; மனநிலை பாதிக்கப்படுகின்றார்கள்; தப்பி ஓடுகிறார்கள்; விடுமுறையில் அமெரிக்கா திரும்புபவர்கள் விடுமுறை முடிந்தும் ஈராக் திரும்புவதாக இல்லை. விடு முறை முடிந்துவிட்டது என்று அவர்களை மீளவும் அழைக்கச்சென்றால், அவர்கள் அந்த மாநிலத்திலேயே காணாமல் போகின்றார்கள்;

இதுதான் இதுவரை அமெரிக்க நிர்வாகம், அமெரிக்க படையினர் தொடர்பாக எதிர்நோக்கிய சிக்கல்கள். தற்போது ஈராக் செல்ல முடியாது என்று படையினர் முகத்துக்கு நேராக மறுக்கவும் ஆரம்பித்துள்ளார்கள். இதுவும் புதிய சிக்கலில் சேர்ந்துள்ளது.

தற்போது வெளிநாட்டுப்படைகள் ஈராக்கில் இருந்து வெளியேறவும் முடிவு செய்துள்ளமை என்பதும் புதியதோர் வகைச் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

அதனால் தான் ஈராக் மக்கள் சுயாட்சியை நிறுவவுள்ள சந்தர்ப்பத்தில் அவர்கள் அருகே இருப்பது ஸ்பெயின் இராணுவத்தின் கடமை என்று புஷ் ஸ்பெயின் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் ஈராக் மக்கள் விடுதலை பெறத்துடிப்பதை சிந்தித்துபார்க்குமாறு நெதர்லாந்திடம் கேட்டுக்கொண்டுள்ளார்.



ஈராக்கில் தொடரும் குண்டு வெடிப்பு

அதாவது வேண்டுகோள் எனும் அடிப்படையில் ஒவ்வொரு நாட்டிடமும் மண்டியிடவும் புஷ் தயாராகியுள்ளார்.

ஏனெனில் ஈராக்கில் ஏற்கனவே சமநிலை காணப்படவில்லை. தாக்குதல்கள் சரமாரியாக தொடர்கின்றன. இந்நிலையில் அமெரிக்காவுடன் கூட்டாக ஈராக்கின் அமைதிக்குப் பாடுபடுவதாகக் கூறிச்சென்ற நாடுகள் இன்று குதிக்கால் தெறிக்க ஓடும் நிலைக்குத் தயாராகியுள்ளன.

அவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டும் இல்லையேல் அமெரிக்கப் படையினர் கிலேசம் அடைந்துவிடுவார்கள். இதனால் புஷ் நிர்வாகம் பாரிய செல்வாக்குச்சரிவை எதிர்நோக்க நேரிடும்.

ஏனெனில், ஈராக்கிற்கு அமைதியை ஏற்படுத்த படையினரை அனுப்பியமையே ஸ்பெயின் தேர்தலின் வெற்றி தோல்வியை நிர்ணயித்துள்ளது. இந்நிலையில் ஈராக்மீது முழுவீச்சாக போரைத் தொடுத்த அமெரிக்காவின் தேர்தலை மட்டும் ஈராக் செல்வாக்கு செலுத்தாமல் இருக்க மாட்டாது.

இதனை ஜோர்ஜ் புஷ் நன்றாக தற்போது உணரத்தொடங்கியுள்ளார். அதே நேரம் இதனை ஜோர்ஜ்புஷ்ஷை எதிர்த்து போட்டியிடும் ஜோன்ஹெரியும் தெரிந்து கொண்டு, பிரச்சாரத்தில் ஈடுபட்டு புஷ்ஷிற்கு நினைக்க முடியாத பலத்த தலைவலி கொடுக்கின்றார்.

அதுமட்டுமன்றி ஈராக்கின் எண்ணெய் வளத்தைக் கொண்டு அமெரிக்காவின் பொருளாதாரத்தை பலமடங்காக அதிகரிக்கச் செய்யமுடியும் என்ற புஷ்ஷின் கனவு, கனவாகவே போய்விடும் போலுள்ளது.

ஆனால் அந்தக் கனவை நினை வாக்குவதில்தான் புஷ் இன்னும் ஆவலாக இருக்கின்றார் எனலாம்.

அதனால்தான் ஈராக்கை ஈராக்கியர்களிடம் கையளிப்பது என்பதை நகர்த்திக் கொண்டே செல்கின்றார்.

அதுமட்டுமன்றி இவ்வளவு இழப்புக்க



விடுமுறையில் நாடுதிரும்பிய அமெரிக்கப் படைவீரர்.

ளுக்கு மத்தியில் எண்ணெய் வளத்தை தனதாக்கிக் கொள்ளாது ஈராக்கை ஈராக்கியர்களிடம் ஒப்படைப்பது என்பது அவருடைய திட்டமாக இருக்கமாட்டாது.

ஆனால் அது சாத்தியமாகாத வகையில்தான் ஈராக்கில் தாக்குதல்கள் தொடர்கின்றன.

இதேவேளை அமெரிக்க சனாதிபதித் தேர்தலும் நெருங்கி வருகின்றது. ஏற்கனவே புஷ்ஷின் பொருளாதாரக் கொள்கைகள் குறித்து பெரும்பாலான அமெரிக்கர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளார்கள். நாட்டின் பொருளாதாரம் திசைமாறிச் செல்கின்றது. வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கவில்லை. மாறாக குறைவடைந்தே செல்கின்றது என்பது அமெரிக்கர்களின் அதிருப்திக்குக் காரணம் ஆகும்.

இதனை சண்டேரைம்ஸ் பத்திரிகையும் சி.பி.எஸ் செய்தி நிறுவனமும் சேர்ந்து நடத்திய கருத்துக் கணிப்பில் 54வீத மானவர்கள் இவ்வாறே கூறியுள்ளார்கள்.

இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அமெரிக்காவின் வரவு செலவுத் திட்டத்தில் கூடுதலாக பணம் ஒதுக்கப்படுவது இராணுவத்திற்குத்தான். 2001ஆம் ஆண்டில் பாதிக்கு மேல் இராணுவத்திற்குத்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. 3430 கோடி டொலர்கள் என்றால்... அதே போல் இந்தவருடம் 3960கோடி டொலர்



ஜோன் ஹெரி

ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இதிலிருந்து அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ் போர்மீது ஆர்வம் கொண்டவர். எந்த நாட்டின் மீதாவது போர் நடத்திக் கொண்டே இருக்க வேண்டும் என்பதில் பேரார்வம் கொணடவர். என்பதாகத்தான் கருதவேண்டியுள்ளது.

அதுமட்டுமன்றி, விண்வெளி ஆய்வு, வேலைவாய்ப்பு, உளவுத்துறை, பொருளாதாரம் என்பவற்றுக்கு ஒதுக்கும் தொகையிலும் கூடுதலான வீதம் அதாவது 75 சதவீதமானது இராணுவம் சார்ந்த ஆராய்ச்சிகளுக்கே வழங்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தீவிர மதப்பற்றுள்ளவர்கள் தான் புஷ் நிர்வாகத்தில் பெரிய பெரிய

**அ. கலைவாணி**

பதவிகளில் இருக்கின்றார்கள்.

அதனால்தான் அமெரிக்காவை ஆயுத வியாபாரமும், மதமும்தான் ஆட்சி செய்வதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்துக் கூறியுள்ளார்கள்.

அதனால் இதுவரை எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செயற்பட்ட ஜோர்ஜ் புஷ் அதன் பலாபலன்களை தேர்தலில் தான் அறுவடை செய்யவுள்ளார்.

அதேநேரம் வியட்னாம் அமெரிக்கத் தேர்தலில் காலாதிகாலமாய் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. அதேபோல் ஈராக்கும் எதிர்வரும் தேர்தல் செல்வாக்குச் செலுத்த தவறமாட்டாது.

ஆனால் ஈராக்போரை நியாயப்படுத்தவும் சரி என வலுவூட்டவுமே புஷ் தற்போது பிரயத்தனம் செய்கின்றார். அதேவேளை, ஈராக்கில் சமநிலை ஏற்படாதவரை அமெரிக்கத் தேர்தலிலும் ஜோர்ஜ்புஷ் வெற்றி அடைவது உறுதியில்லை.

எனவே ஈராக்கை புஷ் எவ்வாறு கையாளப் போகின்றார்...? அதேநேரம் எவ்வாறு அங்கு சமநிலையை ஏற்படுத்தப் போகின்றார்?

எல்லாவற்றுக்கும் மேலாக ஈராக் மக்கள் வீடு, வாசல், சொத்துக்கள், சொந்தங்கள், உடமைகள் என இழந்து போயிருக்கின்றார்கள். நாளுக்கு நாள் அவர்களின் துன்பம் கூடிக்கொண்டுதான் செல்கின்றது. இதை நிவர்த்தி செய்யாத வரை ஈராக்கில் அமைதி என்பது வெறும் வாய்வார்த்தை மட்டுமே.

# வன்னியில் மருத்துவம் - அன்றும் இன்றும்

வன்னிப்பெருநிலப்பரப்புவாழ் மக்களைப்பொறுத்தவரையில் போரினால் இவர்கள்பட்டதுயர்போல் வேறெவரும் தொடராக அனுபவித்ததில்லை யெனலாம்.தொடர்ச்சியான இடப்பெயர்ச்சிகளால் உடைமைகளை இழந்தது ஒருபுறமிருக்க குடும்பத் தலைவரை இழந்நிலை (குறிப்பாக கடலோரக் கிராமங்களில்) வேலை வாய்ப்பின்மையும் குறைந்த ஊதியத்திற்குவேலை செய்யவேண்டியநிலையும் போன்ற நேரடியான தாக்கங்களுக்கு முகங்கொடுத்தது மட்டுமன்றி உணவு மருந்துத் தடை உள்ளிட்ட திட்டமிட்ட பொருளாதாரத் தடையின் அழுத்தங்களையும் தாங்கவேண்டியவர்களாயிருந்தனர்.

### உணவுப்பொருட்கள் மீதான தடையும் நிவாரண வெட்டும்

மிகவும் மோசமான பாதிப்புகளிலொன்று "உணவுப்பொருட்கள்மீதான தடையாகும்" ஏனெனில் 1995-96 ம் ஆண்டு காலப் பகுதியில் சூரியக்கதிர்- இராணுவ நடவடிக் கையினால் யாழ் மாவட்டப் பகுதி களிலிருந்து பெருமளவான மக்கள் வன்னிப்பெருநிலப்பரப்பிற்கு இடம்பெயர்ந்தபோது உணவுப் பொருட்களுக்கான தேவை பலமடங்காக அதிகரித்த நிலையில் நன்கு திட்டமிடப்பட்டு முதற்கட்டமாக அரசினாலும் அடுத்த கட்டமாக இராணுவத்தினராலும் படிமுறையாக குறைக்கப்பட்டமை கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதைதான். உதாரணமாக அவ்வாரம் 100 லொறிகளில் உணவுவரவேண்டிய தேவையிருப்பின் அரசு 40 லொறிக்கான அனுமதியைத்தரும், பாதுகாப்பு-உயர்பீடம் அதை 20 லொறியாக குறைத்துவிட வவுனியாவின் இராணுவத்தலைமை பத்து லொறியில் மட்டுமே உணவுப் பொருட்களை வன்னிப்பகுதிக்குள் கொண்டுவர அனுமதியளித்தது.

ஏற்கனவே குறைந்த வருமானத்துடனும் உணவு உட்பட அனைத்துப் பொருட்களுக்கும் அதிகவிலை கொடுத்து 'வாங்கவேண்டிய நிலையிலுமிருந்த எம்மக்களுக்கு "நிவாரணவெட்டு பேரிடியாகவிழுந்தது" இவற்றின் நேரடி விளைவுகளாக போசனைக்குறைபாடு குருதிச்சோகை மற்றும் நோயெதிர்ப்புச்சக்தி குறைபாடடைந்த நிலை போன்றவையும் மறைமுக விளைவுகளாக தொற்று நோய்களினால் அடிக்கடிபாதிக்கப்படுதல் மற்றும் வேலைத்திறன் குறைந்து வருமானத்தில் மேலும். வீழ்ச்சியேற்பட்டும் எம்மக்கள் அடைந்ததுயர்கள் எண்ணிலடங்கா.

### மருந்து -மருத்துவப்பொருட்கள் மீதான தடை :

இவற்றிற்கெல்லாம் சிகரமாயமைந் தது "மருந்துத்தடை" எனில் மிகையாகாது. ஏற்க னவே போசனைக்குறைபாடு மற்றும் நோயெதிர்ப்புசக்தி குன்றிய நிலையிலுமிருந்த எம்மக்களை மருத்துவத்திற்கென 10-30 கிலோமீற்றர் தூரம் வரை (பெரும்பாலானோர் சைக்கிளில் ) பயணிக்கவேண்டிய நிலையிலிருந்த எம் மக்கள்மீது இம்மருந்துத் தடை எவ்வளவு ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தியிருந்ததென்பதை ஒரு உண்மைநிகழ்வு வாயிலாகக் குறிப்பிட விரும்புகிறேன். 1997-ம் ஆண்டில் ஒருநாள் நண்பகல் வேளையில் நடுத்தரவயதைக் கடந்து முதுமையின் விளிம்பில் கால்வைத்திருந்த நோயாளியொருவர் அக்கராயன் குளத்தில் அப்போது இயங்கிக்கொண்டிருந்த கிளிநொச்சி மாவட்டமருத்துவமனையில் (வெளிநோயாளர் பகுதியில்) சிகிச்சை பெற வந்திருந்தார். அங்கு கடமையிலிருந்த மருத்துவருடனான உரையாடலை இங்கே தருகிறேன்.

***நோயாளி*** : டொக்டர் எனக்கு மலேரியாக் காய்ச்சலுக்கு மருந்து தாங்கோ!

***மருத்துவர்*** : (பலவீனமான தோற்றத்துடன் காய்ச்சலால் நடுக்கத்துடனிருந்தவரை அவதானித்தவாறு)

ஏன் ஐயா உங்களுக்கு மலேரியாக் காய்ச்சல்தானென்று எப்பிடிச் சொல்லுறீங்கள் ?

***நோயாளி*** : எனக்கு மல்லாவியிலை டொக்டர் சொன்னவர்.

***மருத்துவர்*** : அப்ப நீங்கள் அங்கேயே மருந்து எடுத்திருக்கலாமே : ஏன் இவ்வளவு தூரம் வந்தனீங்கள்?

(மல்லாவி பகுதியிலிருந்து அக்கராயன் முப்பது கிலோமீற்றர்)

***நோயாளி*** : அங்க மலேரியா மருந்து முடிஞ்சுதாம் கடையில (பார்மஸி) வாங்கச்சொல்லி எழுதித்தந்திருக்கினம். கடையில தொண்ணூறுருபாயாம்.என்னட்ட காசில்லை, அதுதான் இங்க மருந்தெடுக்க வந்தனான்.

பஸ்சுக்கும் காசில்லை, நடந்துதான் வந்தனான்(30 கி.மீற் தூரம்) இருளமுதல் திரும்பவேணும்

(இப்பாதையில் யானைகளின் நடமாட்டமிருந்த காலப்பகுதி)

இந்நோயாளியை உடனடியாவே விடுதியில் அனுமதித்து சிகிச்சையளிக்கப்பட்டது. ஏனெனில் அக்கராயன் மருத்துவ மனையிலும் மல்லாவி மருத்துவமனையின் நிலைமைதான்.நோய் கடுமையாக இருப்பவர்களை விடுதியில் மறித்து சிகிச்சையளிக்க ஓரளவு மலேரியாக்குளிசைகள் மற்றும் ஊசிமருந்துகளும் கையிருப்பில் இருந்ததேயன்றி வெளிநோயாளர் பகுதியில் மருந்திற்கு பதிலாக மருந்துத்துண்டுதான் கொடுக்க நேர்ந்தது.

இக்காலகட்டத்தில் மருத்துவமனைகளில் மருந்துத்தட்டுப்பாடு நிலவியதை தமக்குச்சாதகமாகப் பயன்படுத்த முனைந்த தனியார்மருந்தகங்கள் மருந்துகளின் விலையை மூன்று அல்லது நான்கு மடங்காக அதிகரித்து "தவிச்ச முயலடிச்ச கதையையும்" மறக்கமுடியாது.எனவே மலேரியாக்குளிசைகளை வவுனியாவில் (உறவினர்மூலம்) வாங்கி பயன்படுத்துமாறு மேலதிக (மருத்துவ !!) ஆலோசனையும் வழங்கநேரிட்டது.

### தொற்று நோய்களின் தாக்கம் அதிகரித்தமை :

(1) மலேரியா நோய் : ஏற்கனவே வன்னியில் வாழ்ந்தமக்களைப் போலன்றி யாழ்.மாவட்டமக்கள் இந்நோய்க்கெதிரான நோயெதிர்ப்புச்சக்தி குறைந்தவர்களாயிருந்த காரணத்தினாலும் போசணைக் குறைபாட்டாலும்அதிகளவில் நோய் வாய்ப்பட்டனர். ஒரேநபர் ஒரே ஆண்டில் ஏழெட்டுத்தடவை நோய்வாய்ப்பட்ட சம்பவங்கள் பல உள்ளன அதுமட்டுமன்றி மலேரியா நோய்க் கிருமிகளை காவிச் சென்று நோயைப்பரப்பும்நுளம்புகளை அழிப்பதற்கான 'மலத்தியோன்' போன்றவற்றின்மீதான தடையும் நோயின் தாக்கம் அதிகரிக்கக் காரணமாயிற்று.

(2)சுவாசத் தொற்று நோய்கள் : காற்றோட்டவசதியற்ற புறாக் கூண்டுபோன்ற வாழிடங்களும் பலர்நெருக்கமாக வாழ்ந்தமையும் சுவாசநோய்கள் (குறிப்பாக சிறுவரில் ) வேகமாகப் பரவ உத வின.

(3)வயிற்றோட்ட நோய்கள் : பாதுகாப்பான குடிநீரை பெறமுடியாமை (குளம் அல்லது வாய்க்கால் நீர் )

(4)சிரங்கு போன்ற தோல்நோய்கள் வேகமாகப் பரவியமை.

நீடித்த நோய்களின் பாதிப்பு அதிகரித்தமை மண் தரையும்சாணத்தால் மெழுகப்பட்டமையும் கிடுகு அல்லது வைக்கோலினால் வேய்ந்த கூரைகளாலான வாழிடங்களும் ( சீமெந்து உட்பட கட்டிடப்பொருட்கள் யாவுமே தடைசெய்யப்பட்ட பொருட்களாயிருந்தமை இங்கு நோக்கத்தக்கது) புழுதிமயமான கிரவல் அல்லது மண் தெருக்களின் பாவனையும் ( தார் சல்லிக்கற்கள் போன்றவையும் தடைசெய்யப்பட்ட பொருட்களாயிருந்தன) தொய்வு நோயின் பாதிப்பை அதிகரித்தன.

வலிப்பு நீரிழிவு உயர்குருதியமுக்கம் போன்ற நீண்டகால நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களும் அடிக்கடிஏற்பட்ட மருந்துத்தட்டுப்பாட்டினால் - பார்மஸிகளில் மருந்தெடுக்கநேரிட்டதால் - பெரிதும் சிரமப்பட்டனர்.

### கர்ப்பகாலபராமரிப்பும் மகப்பேறு வசதியும் பாதிப்படைந்தமை :

1995 ம் ஆண்டுவரை கர்ப்பகாலத்திலோ அல்லது பிரசவநேரத்திலோ சிக்கல்கள் ஏற்படுமிடத்து அல்லதுஅவ்வாறு நிகழக் கூடுமென ஊகிக்கப்படுமிடத்து குறிப்பிட்ட கர்ப்பவதிகள் யாழ் போதனா மருத்துவமனைக்கு அம்புலன்ஸ்வாகனம்மூலம் உடனுக்குடன் அனுப்பிவைக்கப்படுவது வழக்கமாயிருந்தது. அதேசமயத்தில் கிளிநொச்சி மாவட்டமருத்துவமனையில் அரசசார்பற்ற நிறுவனமாகிய எம்.எஸ்.எ.்.ப். குழுவினரும் இயங்கிய தையும் மகப்பேற்று மருத்துவசேவையை வழங்கியமையையும் குறிப்பிடலாம்.

### மருத்துவமனைகளின்சேவை

இடப்பெயர்ச்சியுடன் வன்னியில் புதிதாக மருத்துவர்களும் தாதியரும் மற்றும் பணியாளரும் கடமையிலீடுபடத் தொடங்கியதால் வன்னிப்பெருநிலப்பரப்பின் மருத்துவசேவையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் கணிசமானளவு வளர்ச்சியும் அவதானிக்கப்படக்கூடியதாயிருந்தது.

அதுவரைகாலமும் மாவட்ட மருத்துவமனை மட்டத்தில் சிகிச்சையளிக்கப்பட முடியாமலிருந்த பல்வேறுஅவசர உயிர்காப்பு மருத்துவ செயற்பாடுகள் வன்னிப் பெருநில மருத்துவமனைகளிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டமை

ஒரு சாதனையாகும். வேறு பெரிய மருத்துவமனைகளுக்கு உடனுக்குடன் அனுப்பமுடியாத சூழ்நிலைகளின் நிர்ப்பந்தம் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டபோதிலும் இத்தடைக்கற்களே வன்னி மருத்துவ சேவைகளின் வளர்ச்சிக்கானபடிக்கற்களாக அமைந்தன என்றால் மிகையாகாது.

உதாரணமாக பின்வரும் மருத்துவ செயற்பாடுகளைக் குறிப்பிடலாம்.

(1) கடுமையான நச்சுப்பாம்புக்கடிக்கான சிகிச்சை
(2) மாரடைப்பு நோயினாலேற்படும் அதிர்ச்சி
(3) மூளை மலேரியா
(4) மெனின்ஜைற்றிஸ்
(5) அதி தீவிர தொய்வு நோய்
(6) அதி தீவிர வலிப்பு நிலை
(7) அறுவை மருத்துவ மகப்பேறு
(8) உஹறி ஸ்டரெக்டமி ( கருப்பை அகற்றல் அறுவை மருத்துவம் )
(9) வயிற்று அறுவை மருத்துவம் ( லப்பரோட்டொமி )
(10) அப்பென்டிசெக்ரமி மற்றும் ஹேனியோட்டொமி

மேலே குறிப்பிடப்பட்டவை உட்பட பல்வேறு சிறப்பு சிகிச்சைமுறைகளாலும் எமது வன்னிமக்கள் பலரது உயிர்காக்கப்பட்டமை எமது மருத்துவம் வளர்ச்சிப் பாதையில் செல்வதை எடுத்துக்காட்டுவதாகவே பெருமையடைகிறோம்.

### வருமுன் காப்பு மருத்துவம்

இடப்பெயர்ச்சியும் நிச்சயமற்ற வாழ்நிலைகள் உணவு மற்றும் மருந்துத்தட்டுப்பாடு போன்ற பல்வேறு இடர்களின் மத்தியிலும் வன்னிப்பெருநிலப் பரப்பிலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகள் யாவுமே சிறப்பாகவும் இடையறாதும் தொழிற்பட்டு வருவதுடன் மக்களின் பாராட்டையும் பெற்றுள்ளமை இங்கு பாராட்டப்படவேண்டியதாகும் உதாரணமாக பின்வரும் மருத்துவ செயற்பாடுகளைக் குறிப்பிடலாம் :

(1) கர்ப்பகால கிளினிக் யாவுமே காலந்தவறாமை

(2) குழந்தைகளுக்கான நோய்த்தடுப்பு மருந்து கொடுத்தல் - இங்கு போக்குவரத்து வசதியீனங்களுக்கு மத்தியிலும்காலந்தவறாத செயற்பாடு பாராட்டுக்குரிய தாகும்

(3) கொலரா எனப்படும் வாந்திபேதி நோய் பரவிய காலப்பகுதியில் - தமிழீழ சுகாதார சேவையினதும் விடுதலைப் புலிகள் மருத்துவப்பிரிவுடனும் ஒத்திசைவாக செயற்பட்டு மக்களுக்கு வீடுவீடாக சென்று கொலரா பற்றிய விழிப்புணர்வை ஊட்டியமையும் உயிரிழப்புகள் ஏற்படாம லும் மிகவும் வேகமாகவும் நோயைக் கட்டுப்படுத்தியமைஇது வன்னியில் கடமையாற்றும் பன்னாட்டு தொண்டர் நிறுவனங்களாலும் பெரிதும்பாராட்டப்பட்டதையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும்.

(4) மருத்துவக் கண்காட்சி வன்னியின் பலபாகங்களிலும் நடத்தப்பட்டமை.

### கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் உதயம்

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையிலும் ஏனைய மருத்துவமனைகளிலும் தற்போது பணியாற்றிவருகின்ற மருத்துவ அதிகாரிகளும் பல்மருத்துவ அதிகாரிகளும் பதிவுசெய்யப்பட்ட மற்றும் உதவி மருத்துவ அதிகாரிகளும் மருத்துவ பீட பல் மருத்துவ பீட மாணவர்களும் உறுப்பினர்களாக இணைந்து கிளிநொச்சி மாவட்டமருத்துவமனையில் இன்று கிளிநொச்சி மருத்துவ சங்கத்தை ஆரம்பித்துவைக்கவுள்ளார்கள் எனபதை மனமகிழ்வுடன் அறியத்தருகிறேன்.

இதன்மூலம் பின்வரும் நோக்கங்களை நிறைவு செய்யக்கூடியதாகவிருக்கும்.

(1) மருத்துவமனையை நவீன வசதிகளைக் கொண்டதாக அபிவிருத்தி செய்தல்.

(2) மருத்துவ நிபுணத்துவ சேவையை பெற்றுக்கொடுத்தல்.

(3) இளநிலை மருத்துவர்களின் கல்வி நிலையையும் தொழில்சார் திறமையையும் மேம்படுத்தல்

(4) தாதியர் மருத்துவமாதர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குடும்பநல ஊழியர்கள் தொழினுட்பவியலாளர்கள் மருந்தாளர்கள் உட்பட மருத்துவத்துறை சார்ந்த அனைவரதும் தொழில்சார் திறமையையும் மேம்படுத்தல்.

(5)சுகாதார கருத்துரைகள் கருத்தரங்குகள் மற்றும் மருத்துவக் கண்காட்சிகள் போன்ற ஊடகங்கள்வாயிலாகசுகாதார அறிவை மேம்படுத்தல்.

(6) மருத்துவ சஞ்சிகைகள் மற்றும் பிரசுரங்களை வெளியிடுதல்.

விரைவில் முல்லைத்தீவு மருத்துவ சங்கத்தையும் ஆரம்பிந்து ஒன்றிணைந்த வன்னி தாய்மருத்துவச்சங்கமாக பரிணமிக்கவேண்டுமென்பதே எம்மெல்லோரது அவாவுமாகும்.

**டாக்டர் க.சுதாகரன், M.B.B.S (Cey)**

---

## உந்துருளி மோதியதில் வயோதிபர் பலியானார்!

(மன்னார்)

மன்னாரில் நேற்றுக் காலை இடம்பெற்ற உந்துருளி விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக இடம் பெற்ற மேற்படி விபத்தில் அந்தோனிப்பிள்ளை (வயது-70) உயிரிழந்தவராவார்.

இதன் போது உந்துருளியில் பயணம் செய்த இருவர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (மி)

## 6,34,135 வாக்காளர் அட்டைகள் குடாநாட்டிற்கு எடுத்து வருகை

யாழ். மாவட்டத்தில் இம்முறை 6 இலட்சத்து 34 ஆயிரத்து 135 பேருக்கு வாக்காளர் அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலகத்தில் இயங்கும் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் 6இலட்சத்து 44 ஆயிரத்து 279 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர் இவர்களில் 4ஆயிரத்து 56 பேர் தபால் மூலம் வாக்களிக்க தகுதிபெற்றிருக்கிறார்கள் 6ஆயிரத்து 82பேர் யாழ். மாவட்டத்திற்கு வெளியே இருப்பதால்,10ஆயிரத்து 144 வாக்காளர் அட்டைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்றும் தேர்தல் திணைக்களம் கூறியுள்ளது.

# தப்பியோடிய படையினரை தேர்தல் கடமைக்கு ஈடுபடுத்துவதைத் தவிர்க்க சனாதிபதி பணிப்பு!

## மெய்க்காப்பாளர்களாகக் கடமை

**பாதுகாப்பு படைகளில் இருந்து தப்பியோடி வந்த முன்னாள் படையினரை தேர்தல் கடமைகளுக்கு பயன்படுத்தவேண்டாம் என்று பாதுகாப்பு அமைச்சுக்குப் பொறுப்பான சனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் வேட்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.**

தப்பியோடிய இராணுவ வீரர்களை அரசியல் வாதிகள் தமது மெய்ப்பாதுகாவலர்களாக தேர்தல் கடமைகளுக்குப் பயன்படுத்தி வருவதாக உளவுப்பிரிவு வழங்கிய தகவல்களை அடுத்தே சனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அதேநேரம் தேர்தல் தொடர்பான வன்முறைகளுடன் தப்பியோடிய இராணுவவீரர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளார்கள்.

இதுவரை தேர்தல் வன்செயல்களுடன் தொடர்புடைய சுமார் 110 தப்பியோடிவந்த முன்னாள் இராணுவவீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தேர்தலுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# மரத்திலிருந்து குரங்கு பாய்ந்ததில் உந்துருளியில் சென்றவர் காயம்!

(வடமராட்சி கிழக்கு)

புளியமரத்திலிருந்து குரங்கு வீதியால் சென்ற உந்துருளிமீது திடீரென பாய்ந்ததால் அதனை செலுத்தி வந்தவர் கீழே வீழ்ந்து காயமடைந்தார்.

இச்சம்பவம் பெரியபளைப் பகுதியில் இடம்பெற்றது. இதன்போது தீபன் என்ற இளைஞர் காயமடைந்தார். கடந்த சில தினங்களுக்கு முன் நடந்த இச்சம்பவத்தால் காயமடைந்தவர் பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். உந்துருளியும் சிறு சேதத்திற்குள்ளானது. (11)

# உடன் அமுலுக்கு வரும் வகையில் சீனியின் விலை 5ரூபா குறைப்பு

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சீனி ஒருகிலோவின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து சீனி இறக்குமதி தடைப்பட்டதால் கடந்த 15நாட்களுக்குள் சீனியின்விலை 31ரூபாவில் இருந்து 41ரூபாவாக உயர்ந்தது இதனைக் கருத்திற்கொண்டு சீனிக்கான இறக்குமதித் தீர்வையைக் குறைப்பதற்கு அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. இந்தத் தகவலை பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கையால் அரசாங்கத்திற்கு 250மில்லியன் ரூபா நட்டமேற்படுகின்ற போதும் பாவனையாளரின் நலன் கருதி இந்த முடிவை எடுத்ததாக அவர் தெரிவித்தார். (32)

# கசிப்பு விற்பனை செய்தவர் காவல்துறையால் கைது

(கிளிநொச்சி)

விசுவமடு காவல் பணிமனையினரால் கசிப்பு விற்பனை செய்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பகுதியில் குறித்த நபரிடம் இருந்து ஒன்றரை லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளதுடன் மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

விசுவமடு காவல்துறையினரால் தொடர்ச்சியாகவும் துரிதமாகவும் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை தீவிரமாக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறான குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இரவு வீதிரோந்திலும் காவல்பணிமனைப் பொறுப்பாளர் தலைமையில் விசுவமடு காவல்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். (15)

# நல்லூர் வட்டச் செயலகத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு

(பூநகரி)

நல்லூர் வட்டச் செயலகத்தில் ஊரக எழுச்சிப் பேரவை நிர்வாகத்தினருக்கான சமகால அரசியல் கருத்தரங்கு கடந்த புதன்கிழமை அரசியல் துறைப் பொறுப்பாளர் பாலாஜி தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர், ஊரகப் பொறுப்பாளர், கிராம் சேவகர்கள் கலந்து சிறப்பித்தனர். (34)

# ஐ.தே.க.வுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்த ஊவா வானொலி நிலைய ஊழியர் நீக்கம்!

(கொழும்பு)

ஊவா பிரதேசத்தில் நடத்தப்படும் ஊவா வானொலி நிலையத்தின் 18 உத்தியோகத்தர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஊவா மாகாண ஆளுநரும், சனாதிபதியின் ஆதரவாளருமான நந்தா மத்தியு இந்த பதவி நீக்கத்தை மேற்கொண்டுள்ளார். ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிலையத்தின் நிதி உதவியின் கீழ் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த வானொலி நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவதாக குற்றம் சுமத்தியே இவர்கள் பதவி நீக்கப்பட்டுள்ளதாகக் கூறும் சுதந்திர ஊடக அமைப்பு இதனைக் கண்டித்துள்ளது. (32)

# ஐ.நா. லஞ்ச ஒழிப்பு சாசனத்தில் சிறிலங்கா கையெழுத்திட்டது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் லஞ்ச ஒழிப்பு சாசனத்தில் சிறிலங்கா அரசு கையெழுத்திட்டுள்ளது.

இந்த மகாநாடு கொழும்பில் கடந்த வியாழனன்று நடைபெற்றது. கென்யாவுக்கு அடுத்தபடியாக சிறிலங்காவே கையெழுத்திட்டுள்ளது.

இவ் லஞ்ச ஒழிப்புக்குழு ஐ.நா. பொதுச்சபையினால் உருவாக்கப்பட்டது. அதன் முதலாவது மாநாடு கடந்த ஒக்டோபர் 1ம் திகதி நடைபெற்றது.




எதிர்வரும் 22.03.2004 திங்கள் தொடக்கம் கிளி/நகரில் சகல வாகனங்களுக்கும் முழு பயிற்சியளிக்கப்பட்டு அரச சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு மாதத்தில் பெற்றுத்தரப்படும்.

தொடர்புக்கு:- S.J.S லேணஸ், பிரதான வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

குறிப்பு:- ஆய்ப்பகுதி நடுவப்பணிமனை முன்பாக

நிர்வாகம் S.J.S லேணஸ்.

(4312)


# விளையாட்டு வீரர்களின் ஆங்கிலமொழி ஆற்றலை விருத்தி செய்ய வகுப்புக்கள்

விளையாட்டு வீரர்களின் ஆங்கில மொழி ஆற்றலை மேம்படுத்தும் முகமாக தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தால் இரவுவேளை வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளது.

முதற்கட்டமாக உதைபந்து கிரிக்கெட் விளையாட்டுக்களின் விதிமுறைகள், ஆட்டச்செயற்பாடுகளை ஆதாரப்படுத்தி ஆங்கிலத்தில் வகுப்புக்கள் நடாத்தப்படும். ஒவ்வொரு விளையாட்டிலும் ஈடுபாடுடைய 25 வீரர்கள் தெரிவு செய்யப்படுவர். இரவு 7.00 மணி தொடக்கம் 9.30 மணி வரை வகுப்புக்கள் நடைபெறும்.

கிழமைகளில் இரண்டு நாட்கள் உதைபந்தாட்ட வகுப்புக்களும், இரண்டு நாட்கள் கிரிக்கெட் வகுப்புக்களும் நடைபெறும். வகுப்புக்கள் தொடங்குவதற்கு ஏப்ரல் 15ம் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்களை இளையோர் செயற்பாட்டு நிறுவன தலைமைச் செயலகத்தில் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## உந்துருளி மாயம்

(மன்னார்)

மன்னார் சாவக்கட்டுப் பகுதியில் இளைஞர் ஒருவருக்குச் சொந்தமான உந்துருளி ஒன்று நேற்று முன்தினம் காணாமற்போயுள்ளது. ஹீரோ ஹொண்டா 159-4253 இலக்கத்தைக் கொண்ட உந்துருளி காணாமற்போனதாக மன்னார் பொலிசாரிடம் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது. (மி)

## பிரச்சார மேடை உடைந்தது!

அம்பலாங்கொடையில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற ஐ.தே.மு. பிரச்சார மேடையின் ஒரு பகுதி உடைந்து விழுந்துள்ளது. அமைச்சர்எஸ்.பி. திஸாநாயக்கவும் மேடையில் ஏறி இருக்கையில் அமர்ந்தவுடன் அது உடைந்து விழுந்தது. இதனால், அங்கு பெரும் அமளிதுமளியேற்பட்டதுடன்; கூட்டம் சிறிது நேரம் ஒத்தி வைக்கப்பட்டது. அங்கு பெய்த மழையினால் கட்டுகள் தளர்ந்து இச்சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.


## நீங்காத நினைவலைகள்

மலர்வு 17 08 1930



உதிர்வு 12 02 2004

நாட்டுப்பற்றாளர்
**காசிப்பிள்ளை - கார்த்திகேயன்**
**(இரகண்ணை)**

திதிவெண்பா

*தொண்டர் திலகம் சுடர் கார்த்தி கேயனார்*
*அண்டர் கோன் பாதம் அடைந்ததிதி-விண்டுரைப்பன்*
*ஆண்டு சுபானுதை யாம் அபர பக்கத்தே*
*சுண்டு சப்த மித்திதியென்றேல்.*

நாட்டுப்பற்றாளர் இரகண்ணையின் நினைவு நிகழ்வு இன்று (21.03.2004) ஞாயிறு தொட்டியடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நிகழவுள்ளது. இந்நிகழ்விலும், பகலுணவிலும் பங்குபற்றுமாறு போராளிகள், பொருண்மிய நிறுவனத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொட்டியடி,
விசுவமடு.

(சி.9425)

**குடும்பத்தினர்.**

## 5ஆம் ஆண்டு நினைவுநாள்

தோற்றம் 1972 06 15



மறைவு 1999 03 21

**கப்டன் யாழ்வேள்**
**(ஆழ்வாப்பிள்ளை சரவணபவா)**
வைத்தியப் போராளி

பாமாலை

சரவணப் பொய்கையிலே சரணடைந்த சற்குமரா
அரவணைக்க யாருமின்றி அவதிப்பட்டதை யாரறிவார்
உரவலரென உனையீன்ற உத்தமர்கு ஆழ்கவலை
விரைவினிலே வரவழைத்து வித்துடலாய் மாறினியோ
துரைமதியே துணையென்று துன்பமெல்லாம் தீர்ப்பாயென
கரைகாணாக் கனாக்கண்டோம் கவலைதனைத் தந்து சென்றாய்
பரபரப்பைப் பாரிடத்தும் பாரறியப் பெற்றவர்க்கும்
வரைவற்ற கவலைதனை வாழும்வரை கொடுத்தனையே.

2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் நாள் ஐந்தாண்டு நிறைவு நினைவையொட்டி உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சக போராளிகள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

இல. 925, சிவிக்ஸ் சென்றர்,
வட்டக்கச்சி.

(4325)

**பெற்றோர், சகோதரர்கள்.**



**சிந்தனைக்கு**

இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சி கொண்ட மக்களை எந்தவொரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 21 -03-2004


## சந்திரிகாவின் வியூகம்!

" கருணா என்னை பல முறை அணுக முயற்சித்தார். இருந்தும் திரைமறைவுப் பேரம் எதையும் மேற்கொள்ளும் நோக்கம் எனக்கில்லை என்பதால் அதனை நிராகரித்து விட்டேன" என்ற சனாதிபதி சந்திரிகாவின் கூற்றுக்கள் இதுவரையிலான சிலஊகங்களுக்கு விடையளிப்பதாகவும் அதேவேளை சனாதிபதி சந்திரிகாவின் அரசியல் வியூகம் பற்றிச் சில முடிவுகளுக்கு வருவதற்கு வாய்ப்பானதாகவும் உள்ளது.

கருணா சனாதிபதி சந்திரிகாவுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு தீவிரமாக முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக ஏற்கெனவே தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால் சனாதிபதி சந்திரிகா இதற்கு அளித்த பதில் என்ன என்பது குறித்து ஊகங்கள் மட்டுமானதாகவே இருந்தன. இந்நிலையில் சனாதிபதி கருணா விவகாரம் குறித்து பேசியிருப்பதானது சனாதிபதியின் தற்போதைய நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாய் உள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருணாவுடன் தொடர்புகளை ஏற்படுத்தாமைக்கு இரகசியப் பேரங்களுக்கு தாம் எப்பொழுதும் எதிராக இருந்துள்ளதாக அவர் கூறுவது எந்தளவிற்கு உண்மைத்தன்மை பொருந்தியது என்பது கேள்விக்குரிய தொன்றே. ஏனெனில் அவரது கடந்த கால அரசியலில் பல இரகசியத்தன்மைகள், இரகசிய பேரங்களுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கவே செய்தன. அத்தோடு அவர் நம்பகத்தன்மை கொண்டவரும் அல்ல. ஆகையினால் கருணாவுடன் திரைமறைவு பேரம் எதையும் சனாதிபதி சந்திரிகா செய்துகொள்ளமாட்டார் என்பதோ அன்றி செய்துகொள்ளவில்லை என்றோ தற்பொழுது அறுதியட்டு கூறிவிட முடியாது. ஆனால் ஒன்று தற்பொழுது சனாதிபதி சந்திரிகா கருணாவுடன் நேரடியாக, வெளிப்படையாக உறவுகளை வைத்துக்கொள்ள விரும்பவில்லையென்பதே உண்மையாகும்.

இத்தகையதொரு நிலைக்கு பலகாரணங்கள் உள்ளன. ஆயினும் இதில் முதன்மைக்காரணமாகவுள்ளது கருணா மூலமான தொடர்பினால் ஏப்ரல் 2 பொதுத்தேர்தலும் எதிர்கால சமாதான முயற்சிகளில் ஏற்படக்கூடிய பாதிப்பும் தமக்கு பாதகமானதொரு நிலையைத் தோற்றுவிக்க வாய்ப்பாகிவிடும் என்பதை அவர் உணர்ந்துகொண்டுள்ளமையே ஆகும். அதாவது சமாதானமுயற்சிகள் தொடரப்படுவதற்கு தாமே முட்டுக்கட்டை போட்டதாகச் சர்வதேசம் முடிவுக்கு வந்துவிடக்கூடாது என்பதே ஆகும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா கருணாவுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளாது விட்டாலும் அவரின் சகாக்கள் அவரது கூட்டாளிகள் கருணாவுடன் நெருக்கமான உறவை வளர்த்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இவை அர்த்தமற்ற ஊகங்கள் அல்ல. சுதந்திரக்கட்சி- ஜே.வி.பி, கூட்டணியினரில் ஒரு பகுதியர் கருணாவுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்களாக உள்ளனர். அதிலும் குறிப்பாக ஜே.வி.பி தலைமை இதில் அதீத அக்கறையை வெளிப்படுத்தி வருகின்றது.

அவர்களின் கருத்தின் படி கருணாவின் நடவடிக்கையானது விடுதலைப்புலிகளை குறிப்பிடத்தக்களவில் பலவீனப்படுத்துவதாய் இருக்கும் என்பதாகும். இந்நிலையானது புலிகள் மீதான இராணுவ வெற்றிகளையும், அனுகூலங்களையும் பெறுவதற்கு நல்லதொரு தருணமாக இருக்கும் என்பது அவர்களின் மதிப்பீடாகும்.

இதேவேளை இராணுவத்தரப்பு வெளிப்படையாக இல்லாது விட்டாலும் மறைமுகமாகவேனும் கருணாவிற்கு உதவிவருவதாக தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக கருணாவினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகள் அங்கிருந்து வெளியேறுவதைத் தடுப்பதில் இராணுவம் ஒத்துழைப்பு வழங்கியதாகவே தகவல்கள் வெளியாகிவருகின்றது. மேலும் மட்டக்களப்பிலுள்ள கருணாவின் குழுவினர் இராணுவத்தின் மேற்பார்வையின் கீழுள்ள பிரதான வீதிகளில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமையும் இருதரப்பிற்கிடையிலான ஒத்துழைப்பை வெளிப்படுத்துவதாயுள்ளது.

இதற்கும் அப்பால் தற்பொழுது மட்டக்களப்பு குடும்பிமலைப் பகுதியில் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சுக்கு சொந்தமான உலங்குவானூர்திகள் அடிக்கடி தரையிறங்கிச் செல்வதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பிரமுகர்களும், சிறிலங்கா இராணுவத்தினருடன் இணைந்து செயலாற்றும் தமிழ் இனவிரோதக்குழுக்களைச் சேர்ந்தவர்களும் அங்கு தரையிறங்கி கருணாவுடன் பேச்சுக்களை நடத்திச்செல்வதாகவும் தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகா கருணாவுடன் எத்தகைய திரைமறைவு பேரங்களிலும் ஈடுபடவில்லை எனக் கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவில்லை. அவரின் சகாக்கள் இம்முயற்சிகளில் ஈடுபட்டே வருகின்றனர். ஆகையினால் சனாதிபதி சந்திரிகா கருணாவுடன் தமது தொடர்பை வெளிப்படுத்தவிரும்பவில்லை என்பதே ஏற்றுக்கொள்ளத்தக்க தொன்றாக இருக்கும்.

இவ்வாறானதொரு முடிவுடன் அவர் செயற்படுவதற்கு தேர்தலின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய சில நடவடிக்கைகள் காரணமாக இருக்கலாம். குறிப்பாக தேர்தலில் வெற்றிபெறின் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய அவசியம் - நிர்ப்பந்தம் அவருக்கு உள்ளமை காரணமாக இருக்கலாம். ஆனால் அவை எதுவாக இருப்பினும் கருணாவுடன் சனாதிபதி சந்திரிகா வெளிப்படையாக உறவுகளை மேற்கொள்ள முற்படுவாரேயானால் அவர் நாட்டை யுத்தத்தை நோக்கி வழிநடத்திச் செல்லத் தயாராகிவிட்டார் என்றே அர்த்தம் கொள்ளலாம்.

# பொதுத்தேர்தல் கடமைகளிற்காக 63,000 பொலிசாரை ஈடுபடுத்த ஏற்பாடு!

### பலம்வாய்ந்த பாதுகாப்புத் திட்டமென அறிவிப்பு

(கொழும்பு)

ஏப்ரல் 2ஆம் திகதி இடம் பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் போது 63ஆயிரம் பொலிசார் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக பொலிஸ்மா அதிபர் இந்திரா டீ சில்வா கூறியுள்ளார்.

இவர்களது பணிகள் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்றும், 6483பேர் ரோந்து நடவடிக்கைகளிலும், 21ஆயிரம் பேர் வாக்குச் சாவடிகளிலும், 8250பேர் சோதனைச் சாவடிகளிலும், 2800பேர் வாக்கெண்ணும் இடங்களிலும், 5993பேர் பொலிஸ் நிலையங்களிலும் கடமையிலீடுபடவுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 18ஆயிரத்து 474பேர் விசேடமாக அரசியல்வாதிகளின் பாதுகாப்புக் கடமைகளிலும் ஈடுபடவுள்ளார்கள் என்றும் கூறியுள்ளார்.

அதேவேளை எதிர்வரும் தேர்தலுக்குப் பலம் வாய்ந்த பாதுகாப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாக சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் இந்திரா டீ சில்வா தெரிவித்துள்ளார். இதன்நோக்கம் சுதந்திரமான நேர்மையான தேர்தலை நடத்துவது எனத் தெரிவித்துள்ளார்.

# தப்பியோடிய இராணுவத்தினர் விபரம் கொழும்பில் பார்வைக்கு வைப்பு

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து மூன்று வருடங்களுக்கு முன்னர் தப்பிச் சென்ற கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் சட்டரீதியாக அவர்களது சேவையில் இருந்து விலகிச் செல்வதற்கான ஒழுங்குகளை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமையகம் மேற்கொண்டுள்ளது.

இவ்விதம் தப்பிச் சென்ற இராணுவத்தினரின் பெயர்களைக் கொண்ட பட்டியல்கள் தற்போது கொழும்பு மாவட்ட செயலாளரின் அலுவலகத்திலும் கொழும்பு மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேல்மாகாணத்தில் இராணுவ சேவையில் இருந்து தப்பிச் சென்றவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டத்தின் இறுதிக்கட்டம் இதுவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் காலங்களில் அரச ஊடகத் துறையை கண்காணிக்க தேர்தல் ஆணையருக்கு அதிகாரம்

### சட்டமா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் தேவையேற்பட்டால் அரச ஊடகத்துறைக்கு கண்காணிப்பாளரை நியமிப்பதற்கு தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக கடிதம் ஒன்று சட்டமா அதிபரினால் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தேர்தல்காலங்களில் அரச ஊடகங்களில் முறை கேடுகள் அதிகமாக நடைபெறுவதாக முறைப்பாடுகள் தேர்தல் ஆணையாளருக்கு கிடைத்துள்ளபடியால் இதை கட்டுப்படுத்துவதற்கு தேர்தல் திணைக்களத்திற்கு பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளபடியால் இத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# சனாதிபதி ஒன்பது வருடங்கள் பதவியிலிருந்தும் தற்போதே பதவியேற்றது போல் செயற்படுகின்றார்

### அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் விசனம்

(கொழும்பு)

அரச ஊடகங்கள் மூலம் கட்சி சார்பான பிரச்சாரங்களை நடத்துவதை தடுப்பதற்கென சரியான அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு ஜீ.எல்.பீரிஸ் தேர்தல் ஆணையாளரிடம் கோரியுள்ளார்.

தேர்தல் திணைக்களம் இதைப் பற்றி கவனமெடுக்காதிருப்பினும் இனியாவது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார்.

கடந்த 9 வருடமாக பதவியிலிருந்த சனாதிபதி தற்போதே அதிகாரத்துக்கு வந்துள்ள மாதிரி நடவடிக்கையிலீடுபட்டிருப்பதாக குற்றம் சுமத்தியுள்ள அவர் அரசியல் அமைப்பை மாற்றுவதாக கூறிக்கொண்டு அரசியலில் நீடிக்க முனைவதாக கூறியுள்ளார். அத்துடன் சனாதிபதி தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்களையும் தம் வசப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# சிறிலங்கா அணியுடனான டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணி வென்றது

### -2வது டெஸ்டில் 27 ஓட்டங்களால் வெற்றி

சிறிலங்கா- அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் கண்டியில் நடைபெற்ற 2வது டெஸ்ட் கிரிகெட் போட்டியில் அவுஸ்திரேலியா 27 ஓட்டங்களால் சிறிலங்காவை வென்று தொடரை கைப்பற்றியது.

5 நாட்களாக நடைபெற்ற இப்போட்டியில் தனது முதலாவது இனிங்சில் அவுஸ்திரேலியா அணி 120 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது பதிலுக்கு தனது முதலாவது இனிங்சை ஆரம்பித்த சிறிலங்கா 211 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் இரண்டாவது இனிங்சை ஆடிய ஆஸி. அணி 442 ஓட்டங்களைப் பெற்றது.

இதன்படி 352 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் நேற்று முன்தினம் இரண்டாவது இனிங்சை தொடங்கிய சிறிலங்கா ஆட்டநேர முடிவின்போது 7 விக்கட்டுக்களை இழந்து 301 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து இறுதிநாளான நேற்று 3 விக்கட்டுக்கள் எஞ்சி இருந்த நிலையில் 51 ஓட்டங்கள் பெறவேண்டி ஆட்டத்தை தொடர்ந்தது.

எனினும் ஆஸி. அணியின் பந்து வீச்சின் காரணமாக 23 ஓட்டங்களை மட்டும் பெற்று ஆட்டமிழந்தது.

இந்தவகையில் அவ்வணி 27 ஓட்டங்களால் பரிதாபமாக தோல்வியைத் தழுவியது. ஆட்டநாயகனாக ஷேன்வோன் அறிவிக்கப்பட்டார்.

மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் இதுவரை நடந்த இரு போட்டிகளில் ஆஸி. அணி வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாக்.-இந்தியா ஒருநாள் போட்டி லாகூரில் இன்று 4-வது போட்டி

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 4வது ஒருநாள் போட்டி இன்று லாகூரில் பகல் இரவு ஆட்டமாக நடைபெறுகின்றது.

ஐந்து போட்டிகளைக்கொண்ட இத்தொடரில் நேற்று முன்தினம் பெஷாவரில் நடைபெற்ற போட்டியில் 4விக்கட்டுக்களால் இந்தியாவை வென்றதன் மூலம் பாகிஸ்தான் 2-1 என்ற நிலையில் முன்னணியிலுள்ளது.

இப்போட்டியில் முதலில் மட்டை வீசிய இந்தியஅணி 50 ஓவர்களில் 9விக்கட் இழப்புக்கு 244 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணியின் யுவராஜ்சிங் மட்டுமே அதிகபட்சமாக 65ஓட்டங்களைப் பெற்றார். நட்சத்திர வீரர் டெண்டுல்கர் ஓட்டமெதுவும் எடுக்காது ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

245 ஓட்டம் என்ற வெற்றியிலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் 47.2 ஓவரில் 247ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. அவ்வணியின் யசிர் ஹமீட் 98 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அப்துல் ரசாக் 53 ஓட்டங்களையும், ஷொயிப் கான் 22 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காதிருந்தனர்.



# ஓர் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த பெண்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும்

## - யாழ். பிரச்சாரக்கூட்டத்தில் தமிழினி

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேசியதலைவர் பிரபாகரன் அவர்களின் வழி நடத்தலில் அணி திரண்டு போராட்ட வரலாற்றில் சாதனைபடைத்த தமிழீழப் பெண்கள் அவர் வழியிலேயே ஓர் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தமது வாக்குரிமை களைப் பயன்படுத்த வேண்டும் என தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

நேற்று யாழ். நகரில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சார நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடந்த காலப் போரியல் வரலாற்றில் தமிழ் பெண்கள் பல சாதனைகளைப படைத்துள்ளனர் இதனால எமது போராட்டம் வலுப் பெற்றது. இத்தனைக்கும் காரணம் எமது தலைவர் எமக்கு ஊட்டிய தன்னம்பிக்கையும், மனோபலமும்தான்.

இதனால் பல்வேறு சாதனைகளைப் படைத்து இன்று தமிழீழப் பெண்கள் உலக அரங்கிலே பேசப்பட்டுவந்திருக்கின்றனர். இத்தகைய பெண்கள் எதிர்வரும் தேர்தலூடாக தமிழ் இனத்தின் தலைவிதிகளை தீர்மானிக்கும் சக்தியை தமிழினத்தின் அபிலாசை களைப் பிரதிபலிக்கும் விதமாகப் போட்டியிடும் பிரிவினருக்கு தம் ஆதரவை வழங்க முன்வரவேண்டும்.

போராட்டத்தின் மூலம் தமிழீழப் பெண்களுக்கு சமவாய்ப்பைப் பெற்றுத்தந்த தலைவர் அமைப்பு ரீதியாகவும், சனநாயகரீதியாகவும் எமது சமவாய்ப்பினை உறுதிப் படுத்தும் தன்மையை இந்தத் தேர்தலுக்காக எம் கையில் தந்துள்ளனர் என்றார். (33)

# வாக்காளர் அட்டைகளை பெற்றுக்கொள்ள வேண்டுகை!

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து வேறு பகுதிகளில் வசித்து வருவோர் தமது வாக்காளர் அட்டைகளை தமது நிரநதர இடங்களிலுள்ள தபாலகங்களில் எதிர்வரும் 25-ம்திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரந்தன், கண்டாவளை பிரதேசங்களில் உள்ள தபாலகங்கள், உபதபாலகங் களிலிருந்து கடந்த 18-03-2004 தொடக்கம் தேர்தல் வாக்காளர் அட்டைகள் தபால் ஊழியர்களால் வீடு வீடாகச் சென்று வழங்கப்பட்டு வருகிறது. இப்பிரதேசங்களில் இருந்து வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த மக்கள் தமது வாக்காளர் அட்டைகளை எதிர்வரும் 25-03-2004 திகதிக்கு முன்னர் வந்து தமது பகுதி தபாலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறு தபாலக வட்டாரங்கள் அறிவித்துள்ளன. (14)

# எந்தக்கட்சி ஆட்சியமைத்தாலும் பாதுகாப்பு அமைச்சு என்னிடமே

## - சனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்

(கொழும்பு)

எந்தக்கட்சி தேர்தலில் வெற்றி பெற்றாலும் பாதுகாப்பு அமைச்சு தனது பொறுப்பிலேயே இருக்கும் என ரோய்டர் செய்திஸ்தாபன நிருபர் ஸ்கொட் மெக்டொனலுக்கு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தற்பொழுது ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்தம் தொடரப்பட்டு பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடரும் விடுதலைப்புலிகள் இயக்கம் இரண்டாகப் பிளவுபட்டிருந்தாலும் எமது கட்சி ஆட்சிக்கு வந்தால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியின், தேர்தல் வேலைகள் மிக வெற்றிகரமாக நடை பெற்று வருகின்றன. ஆனாலும் விகிதாசார தேர்தல் நடைமுறை யால் எந்தக்கட்சியும் அதிக பெரும்பான்மை பலத்தைப் பெறமுடியாது. இது நாட்டிற்கு ஏற்பட்டிருக்குக்கும் பெரும் பிரச்சினையாக நான் கருதுகிறேன். விடுதலைப்புலிகள் இயக்கம் இரண்டாகப் பிளவுபட்டிருப்பதால் பிரச்சிலனயை வெகு இலகுவாகத் தீர்க்க முடியும் என மேலும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் ஒப்பந்தம் ஒன்றுக்குத் தயாராக இருந்ததாக சனாதிபதி தகவல் வெளியிட்டுள்ளார். நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய சனாதிபதி 2001ஆம் ஆண்டில் பதவியேற்ற எமது அரசாங்கத்தை ஐக்கியதேசியக் கட்சி திட்டமிட்டு, கலைத்ததன், காரணமாகவே இதனை மேற்கொள்ள முடியாது போனதாகக் கூறினார். தற்போது நடைமுறையிலிருக்கும் போர் நிறுத்த உடன்பாட்டைச் சமாதானம் வரை கொண்டு செல்வதற்குள் தாம் தயார் எனத் தெரிவித்த அவர் எந்த ஆட்சி வந்தாலும் நாட்டைத் துண்டாடாது ஏற்படுத்தப்படும் சமாதானத்திற்கு தாம் ஆதரவு வழங்கப்போவதாகக் குறிப்பிட்டார். தற்போதைய போர் நிறுத்தம் காரணமாக உரிய இயல்பு நிலை ஏற்படவில்லை என அவர் குறிப்பிட்டார். (32)

# ஜெயராஜ் பர்னாண்டோபுள்ளைக்கு ஆதரவு வழங்கக் கூடாது

## - மற்றொரு ம.ஐ.சு.மு.வேட்பாளர் மிரட்டல்

பொதுசன ஐக்கிய முன்னணியின் முன்னாள் அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சின் முக்கிய உறுப்பினரும் கம்பகா மாவட்ட மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி வேட்பாளருமாகிய ஜெயராஜ்பர்ணான்டோபுள்ளேக்கு ஆதரவு வழங்கக்கூடாதென மற்றுமொரு கம்பகா மாவட்ட மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி வேட்பாளராகிய சட்டத்தரணி சூரிய ஆராய்ச்சி கெலனி தலுகம கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஒருவரை மிரட்டியுள்ளார்.

கூட்டுறவுச் சங்கத் தலைவரின் தலையில் துப்பாக்கியைவைத்து இவர் மிரட்டியதாக புகார் செய்யப் பட்டதையடுத்து அவரை இம் மாதம் 29 ம் திகதி கொழும்பு நீதி மன்றின் ஆஜராகும்படி நீதிபதி பணித்துள்ளார்.

# கச்சதீவு அந்தோனியார் உற்சவம் வரும்30-ம் திகதி நடைபெறும்

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

வழமையாக மூன்று தினங்கள் நடைபெறும் வருடாந்த திரு விழா, உரிய நிதிஒதுக்கீடுகள் கிடைக்காமையால் ஒரு தினம் மட்டுமே கொண்டாட ஏற்பாடா கியுள்ளது.

திருவிழாவிற்கு வரும் யாத்திரிகள் அனைவரையும் குறிக்கட்டுவன் மற்றும் நெடுந்தீவு இறங்குதுறைகளூடாக அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது.

இதனிடையே தென்னிந்திய யாத்திரிகள் மற்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகளும் இங்கு வருகைதரலாமென எதிர்பார்க் கப்படுகின்றது. அவ்வாறு தமிழ்நாடு மீனவ சங்க பிரதிநிதிகளும் வருமிடத்து இலங்கை கடற்பரப்பினுள் இந்திய மீன்பிடிபடகுகளது அத்துமீறல்கள் தொடர்பாக உள்ளூர் மீனவ சங்கப் பிரதிநிதிகள் பேச்சுக்களை நடாத்த முடிவு செய்துள்ளனர்.

இதேவேளை கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந் தத்திருவிழாவிற்கான ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய யாழ். செயலகத்தில் கூட்ட மொன்று நாளை இடம்பெற வுள்ளது. உதவி அரச அதிபர்கள், பிரதேச சபை செயலர்களுடன் கடற் படை,பொலீஸ் உயரதிகாரிகளும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (27)

# தாதிமாருக்கு பயிற்சி வழங்குவதில்லை வைத்திய அதிகாரிகள் சங்கம் முடிவு

(கொழும்பு)

தாதிமாருக்கு வைத்திய ஆலோசனைகள் அறிவுரைகள் இனிமேல் வழங்கப் போவதில்லை என வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. மருத்துவம் சம்பந்தமான விரிவுரைகள், அறுவைச் சிகிச்சை சம்பந்தப்பட்ட பயிற்சி, ஏனைய விசேட பயிற்சிகள் வழங்கப்போவதில்லை. மருத்துவ சங்கத்தின் பேச்சாளர் வன்ன பெரேரா அறிவித்துள்ளார்.

வைத்திய அதிகாரிகள் சங்கம் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு எதிராக தாதிமார்கள் சங்கம் செயற்பட்டதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

### நெதர்லாந்து..

மான இச் சந்திப்பு பகல் ஒருமணிவரை நீடித்தது.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன்,ஜோர்ஜ் ஆகியோர் கலந்து கொண்டனர் நெதர்லாந்து சார்பாக இலங்கைக்கான நெதர்லாந்து தூதரகத்தின் முதலாவது செயலாளர் ஜான்குவேஸ் கென், மற்றும் நெதர்லாந்தை சேர்ந்த பேராசிரியர், ஜோர் ஜீ.ஈ.பிரோக், கலாநிதி கிறிஸ்வான் புரோக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நேற்றைய சந்திப்பின்முடிவில் நெதர்லாந்து பிரதிநிதிகளுக்கு தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களால் நினைவுப் பரிசில்கள் வழங்கப் பட்டன. (லோ,பி)

### பௌத்த..

பொலிஸ் நிலையத்திற்கு தெரியப் படுத்தியும் அவர்கள் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லையென்றும் தேரர் அறிவித்துள்ளார்.

### புலிகள்...

டிருக்கும் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு அரசியல் கட்சிகள் இவ்வாறான தந்திரங்களை கையாள்வது இயல்பு என்று கூறிய அவர், இனநெருக்கடி விவகாரத்தில் தென்னிலங்கை மக்களின் முடிவிற்காகவே தமிழீழ மக்கள் காத்திருப்பதாகவும். தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனநெருக்கடிக்கு தீர்வுகாண்பதற்குப் பொருத்தமானதும் தகுதியானதுமான அரசாங்கத்,தைத் தீர்மானிப்பது தென்னிலங்கை மக்களே என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் மேலும் தெரிவித்துள்ளார்.

### கூட்டமைப்பினர்..

போராடி வந்த விடுதலைப்புலிகள் இன்று ஒரு தேர்தலை எதிர்கொள்ளுகின்றார்கள் இந்த தேர்தல்தான் தமிழினத்தின் விடுதலையைத் தீர்மானிக்கும் எனவே ஒப்பீட்டள வில் அதிகமாக வாழும் பெண்கள் தமது வாக்கின் மூலம் தமிழ் இனத்துக்கு சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுததர முன் வர வேண்டும் என்றார். (33)

### கிறிக்கெட்..

படுத்தி மைதானத்துக்குள் புகுந்த பொலிசார் விளையாட்டு வீரர்கள், விளையாட்டு ரசிகர்கள் மீது தடியடிப் பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொலிசாருக்கு எதிராக மாணவர்களும் தடியடி, கல்வீச்சு என்பவற்றில் ஈடுபட்டுள்ளனர். இதனால் நேற்று மாலை அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளதுடன் போட்டியும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டியில் யாழ். பரியோவான் கல்லூரி அணி வெற்றி பெறும் வாய்ப்பை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (33)

### ஹக்கீமின்..

முன்னர் கடற்படையில் கடமையாற்றியவர்கள் எனவும் தற்சமயம், துறைமுக அதிகார சபையில் காவற்கடமைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் என விசாரணையில்இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை இம்மூவரையும் கல்முனை நீதிமன்ற நீதவான ஐம்பதாயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்துள்ளார்.

கொழும்பில் இருந்து சென்ற இந்த துறைமுக அதிகாரியின் வாகனத்தில் இருந்த ஆயுதம் சட்டபூர்வமானது எனவும் அதற்குத் துறைமுகப் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரபூர்வ அனுமதி இருப்பதாகவும் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வழங்கிய சான்றுக் கடிதத்தை ஏற்றுக் கொண்ட நீதவான் இவர்களை விடுதலை செய்துள்ளார்.

எதிர்வரும் எட்டாம் திகதி இவர்களை நீதிமன்றில் ஆஜராகுமாறும் நீதவான் பணித்துள்ளார். (32)

### வாக்களிப்பின்..

பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன் போது கடந்த முறையைப் போன்று இம் முறை பொதுத் தேர்தலில் வாக்களிப்பின் போது சிக்கல்கள் நிகழ்ந்தால் தேர்தல் ஒத்தி வைக்கப்படுமென்று மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் கூட்டத்திற்கு தலைமை தாங்கியவருமான இ.மோனகுருசாமி தெரிவித்துள்ளார்.

இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசங்களைச் சேர்ந்த வாக்காளர்களுக்கான வாக்களிப்பு ஏற்பாடுகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளைச் சேர்ந்த எழுபத்தொன்பதாயிரம் வாக்காளர்கள் எவ்வித சிக்கலுமின்றி வாக்களிப்பதற்கு உரியநடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உடன் படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்த சூனியப்பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு பொலிஸ் மற்றும் படைத்தரப்பு மறுத்துள்ளது. எனினும் அன்றைய தினம் சோதனைச்சாவடி ஊடாக வாக்காளர்கள் சுதந்திரமாகச் செல்ல அனுமதிப்பதற்கு எழுத்து மூலம் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகர், இராணுவ உயரதிகாரிகள், விசேட அதிரடிப்படை, பதில் கட்டளை அதிகாரி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் கைச்சாத்திட்டு உடன்படிக்கை ஒன்றை தயாரித்துள்ளார்கள்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேச வாக்காளர்கள் அன்றைய தினம் பொதிகள் மற்றும் பொருட்கள் எடுத்துவரக்கூடாது என்று கிராமசேவை அலுவலர் மூலம் அறிவுறுத்துதல் மற்றும் வாக்காளர்களுக்கான விசேட போக்குவரத்து வசதிகளை மாவட்ட தேர்தல் தெரிவு அத்தாட்சி அலுவலகர் மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் அந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாக்காளர்களுக்குரிய 89 வாக்களிப்பு நிலையங்களும் 17இடங்களில் கொத்தணி முறையில் அமைக்கப்பட்டுள்ளன

# சாவு அறிவித்தல்

## கந்தர் பசுபதி

நெடுந்தீவைப்பிறப்பிடமாகவும் துணுக்காய் கல்விளானை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் பசுபதி அவர்கள் 19.03.2004 அன்று இரவு காலமானார். அன்னார் காலம் சென்றவர்களான கந்தர்நாகத்தை ஆகியோரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, பார்வதி, காசிப்பிள்ளை, சின்னத்துரை, இராமநாதர் மற்றும் வைரவநாதர் (நெடுந்தீவு) சின்னம்மா (கல்மடு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வசந்த ராணி,இராசலிங்கம், செல்வராசா, சந்திரமணி, வசந்தாதேவி, பஞ்சலிங்கம், புவிநாதன், வசந்தமலர், சுந்தரலிங்கம், புஸ்பநாதன் காலஞ்சென்ற தியாகலிங்கம், வளர்மதி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், தனபாலசிங்கம், பாமா, புஸ்பமலர், கமலநாதன், இலட்சுமிகாந்தன், நித்தியானந்தன், நகுலகேசன், இராகலட்சுமி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று 21.03.2004 இன்று (ஞாயிற்றுக்கிழமை) பி.பகல் 2.00 மணியளவில் பூதவுடல்கல்விளான் பாலியாற்று இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

பிள்ளைகள்.

(4117)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.